மாநகர சபை, யாழ்ப்பாணம்,

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 22 ஞாயிற்றுக்கிழமை (07.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 263




## யாழ்.ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.அரசாங்க அதிபர், வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர், வடக்கு மாகாண சபை அமைச்சின் செயலாளர்கள் மற்றும் யாழ்.மாவட்ட திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக் கூட்டத்தின் போது யாழ்.மாவட்டத்தில் பல்வேறு துறைசார்ந்த அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளதுடன் கடந்த கால அபிவிருத்திப் பணிகளின் நிலைமைகள் தொடர்பிலும் விபரிக்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. (ச-5)

## பாக்.ஜனாதிபதித் தேர்தலில் சர்தாரி வெற்றி பெற்றார்

(இஸ்லாமபாத்)



பாகிஸ்தானில்.நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் கணவரான ஆசிப் அலி சர்தாரி வெற்றி பெற்றுள்ளார்.

இவர் பாகிஸ்தானில் 11-வது ஜனாதிபதியாக (பதில் ஜனாதிபதிகளைத் தவிர) பதவி ஏற்கவுள்ளார். பாகிஸ்தான் ஜனாதிபதியாகப் பதவி வகித்து வந்த பர்வேஷ் முஷாரப் கடந்த மாதம் 18 ஆம் திகதி பதவியை இராஜினாமா செய்தார்.

அதனையடுத்துப் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நேற்று ஜனாதிபதித் தேர்தல் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வட மாகாண சபையின் அலுவலகத்தை மாங்குளத்தில் அமைக்க ஆலோசனை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரை

(கொழும்பு)

**வட மாகாண சபைக்கான அலுவலகத்தை மாங்குளத்தில் அமைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டிருப்பதாக வடக்கு மாகாண செயலணிக் குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார். வவுனியா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுக்கான கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.** (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக் களமுனை மோதல்களில் 24 விடுதலைப்புலிகள் உயிரிழப்பு

### இராணுவம் கூறுகின்றது

(கொழும்பு)

வன்னிக் களமுனைகளில் நேற்றுக் காலை 6 மணி வரையிலான 24 மணி நேரத்தில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற வெவ்வேறு மோதல்களில் 24 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவத் தலைமையகம் கூறியிருக்கின்றது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியா -மன்னார் வீதி, தாலிக்குளம் பிரதேசம், வவுனியா பாலமோட்டை, கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளம், வெலிஓயா, ஆண்டான்குளம் ஆகிய போர்முனைகளில் இடம்பெற்ற மோதல்களில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமத்தில் நேற்று பெண் சுட்டுக்கொலை


கொடிகாமம் மடத்தடி வீதியில் நேற்றுப் பெண் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் வரணி குடமியனைச் சேர்ந்த நடராஜா சுசிலா (வயது-49) என்ற பெண்ணே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கொடிகாமம் மடத்தடி வீதியூடாக சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே பிரஸ்தாப பெண் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி பதில் நீதிவான் எஸ்.கணபதிப்பிள்ளை பிரேத பரிசோதனைக்காகச் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கொடிகாமம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்திற்கு அங்கீகாரம்




(வாஷிங்டன்)

அணுசக்தி தொழில்நுட்பம் தொடர்பில் இந்தியா மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளை விலக்க வேண்டும் என்று அமெரிக்கா முன் வைத்த பிரேரணையை அணுசக்தி எரிபொருள் மற்றும் தொழில்நுட்பத்திற்கான வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் நாடுகளுடைய கூட்டமைப்பு அங்கீகரித்துள்ளது.

சர்வதேச அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடவில்லை என்றாலும் அந் நாடு அணுசக்தி பொருள்களைச் சட்டபூர்வமாக இறக்குமதி செய்து கொள்வதற்கு இதன் மூலம் அனுமதி கிடைத்துள்ளது.

ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் திட்டமிடப்பட்ட காலத்திற்கும் அதிகமாக நீடித்துக் கொண்டுபோன (12 ஆம் பக்கம் பார்க்க)



## வன்னேரிக்குளம் மோதலில் 50 இராணுவத்தினர் பலி

### கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

அக்கராயன் வன்னேரிக்குளம் பகுதியில் படையினரின் நடவடிக்கை தமிழீழ விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டதில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை 50 என்று பாதுகாப்பு அமைச்சை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுவரை 13 படையினரே கொல்லப்பட்டனர் என்று படைத் தரப்புத் தெரிவித்து வரும் நிலையில் இத் தகவல் வெளியாகியிருக்கின்றது. விடுதலைப்புலிகள் அக்கராயன் வன்னேரிக்குளம் முறியடிப்பில் படையினரின் 22 உடலங்களையும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணப் பொருள்கள் வன்னிக்கு அனுப்பிவைப்பு

### உலக உணவுத் திட்டம் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையில் தொடர்ச்சியாக நடைபெறும் மோதல்களால் இடம்பெயர்ந்திருக்கும் மக்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படுவதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்தது.

வவுனியா மற்றும் வன்னியிலுள்ள தமது களஞ்சியங்களுக்குத் தொடர்ச்சியான உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் அவை எந்தவிதமான தடையுமின்றி மோதல்கள் இடம்பெறும் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும் உலக உணவுத் (12 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவு காட்டுப் பகுதியிலிருந்து புலிகளின் விமானங்கள் ஏவப்படுகின்றன

## புலனாய்வுத்துறை தகவல் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் வான் தாக்குதல்களுக்காக ஏவப்படும் விமானங்கள் முல்லைத்தீவு காட்டுப் பகுதியிலிருந்து ஏவப்படுவதாக இராணுவப் புலனாய்வுத் துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரணைமடு மற்றும் முல்லைத்தீவில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் விமானத் தளங்களிலிருந்து தாக்குதல் விமானங்கள் ஏவப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தலைவர்களில் ஒருவரான கீர்த்தி என்பவரின் பிரிவில் பணியாற்றிய விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரணைமடு மற்றும் முல்லைத்தீவு விமானத் தளங்கள் கைவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் விமானங்களை வெளிநாட்டு விமானிகள் செலுத்துகின்றனரா என்பது குறித்தும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை கடற்படை முகாம் மீதான தாக்குதலின் பின்னர் பத்து நிமிடங்களில் குறித்த விமானங்கள் தரையிறக்கப்பட்டுள்ளன.

அனுபவம் மிக்க விமானிகளினாலேயே இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்ள முடியும் என புலனாய்வுத் துறையினர் யூகங்களை வெளியிட்டுள்ளனர். (ச-5)

## யாழ்.மேலதிக நீதவானாக ஜோய் மகாதேவன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிபதியாகவும் யாழ்.நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவானாகவும் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகாதேவன் கடமையாற்றுவார் என நீதிச் சேவை ஆணைக்குழு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

தற்போது ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதிபதியாகவும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவானாகவும் கடமையாற்றிவரும் திருமதி ஜோய் மகாதேவன் அப்பதவியிலிருந்தவாறே யாழ்.மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிபதியாகவும் யாழ்.நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவானாகவும் கடமையாற்றுவார் என நீதிச் சேவை ஆணைக்குழு தனது நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. (ச-5)

## வேலணை பிரதேச சபையில் கணனிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)


உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வேலணை பிரதேச சபை அனுசரணையுடனான மாபெரும் முழுநாள் கணனிக் கருத்தரங்கு எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பிரதேச சபை திட்டமிடல் பிரிவில் இடம்பெறும்.

அன்றைய நிகழ்விற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு யாழ்.-இளைஞர் கணனி சேவைகள் (Youth Computer Services) நிறுவனத்தினரால் முழுநேர விரிவுரைகளும் -கணனி செய்முறைப் பயிற்சியும் இலவச கணனிக்குறிப்புக்களும் வழங்கப்படும்.

பயிற்சி முடிபில் பரீட்சை வைக்கப்பட்டு சான்றிதழ் உள்ளூராட்சி வார இறுதி நாளில் வழங்கப்படும்.

பயிற்சிக்கு பதிவு செய்தவர்கள் உரிய நேரத்தில் தவறாது சமுகம் தருமாறு பிரதேச சபைச் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் கோரியுள்ளார்.

இதேவேளை இளைஞர் கணனி சேவைகள் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பெறுமதியான மாணவர் கையேட்டு நூலினை ரூபாய் 100 செலுத்திப் பெற்றுக் கொள்ளவும் வழியமைக்கப்பட்டுள்ளது. (ச)



அண்மையில் சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியில் குதூகலச் சேமிப்பு கணக்கு ஆரம்ப வைபவத்தில் முகாமையாளர் சி.தனீஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும் சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் அபிவிருத்தி சபை பொது முகாமையாளர் கணக்கினை ஆரம்பித்து வைப்பு புத்தகத்தை பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்)

## இலங்கையில் மீண்டும் எலிக்காய்ச்சல்

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் எலிக் காய்ச்சல் பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில்கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மாத்திரம் 117 பேர் இந்த காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் இந்த நோயினால் 34 பேரே மரணமாகினர்.

தற்போது இந்த நோயினால் 3 ஆயிரத்து 700 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோயினால் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் 2 ஆயிரத்து 600 பேர் மாத்திரமே பாதிக்கப்பட்டிருந்தனர்.

கம்பஹா, களுத்துறை, மேல்மாகாணம், சப்ரகமுவ, கண்டி, தென்மாகாணம், கேகாலை ஆகிய இடங்களிலேயே தற்போது அதிகளவானோர் எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் காய்ச்சல் நீர், கால்நடைகள், நாய்கள் மற்றும் பூனைகளின் மூலம் பரவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## மண்டான் வல்லை வீதியில் இளைஞனின் சடலம் மீட்பு

(பருத்தித்துறை)

மண்டான் வல்லை வீதியில் வெட்டுக் காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

இராசகிராமம் கரவெட்டி மேற்கைச் சேர்ந்த விறகு வியாபாரியான இராசையா லக்சதன் (வயது-20) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார். கடந்த மூன்றாம் திகதி காணாமல் போன இவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரின் கழுத்தில் வெட்டுக் காயங்களும் உடலில் அடி காயங்களும் காணப்படுவதாக பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ் ராஜா விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையை வல்வெட்டித் துறை மாவட்ட அதிகாரி கே.மயிலேறும் பெருமாள் மேற்கொண்டார். பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-52)

## பயணப் பாதுகாப்பு அனுமதியை இன்று பெற்றுக்கொள்ள முடியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் மற்றும் புறநகர்ப் பகுதி இராணுவ முகாம்களில் யூலை மாத நடுப் பகுதியிலிருந்து கடந்த ஓகஸ்ட் 18ஆம் திகதி வரையான காலப் பகுதியில் வெளிமாவட்டங்களிற்கு செல்வதற்கான பயணப் பாதுகாப்பு அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களின் பாதுகாப்பு பயண அனுமதி (கிளியரன்ஸ்) இன்று அந்தந்த முகாம்களில் வழங்கப்படுமென யாழ.சிவில் நிர்வாக அலுவலக ஒருங்கிணைப்பாளர் மேஜர் அருணசிறி அறிவித் துள்ளார்.

குறித்த காலப்பகுதியில் யாழ்.நகர் மற்றும் யாழ்.புறநகர்ப் பகுதி இராணுவ முகாம்களில் வெளிமாவட்டங்களிற்கு செல்வதற்கான பயணப் பாதுகாப்பு அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களின் பாதுகாப்பு அனுமதிகள் நேற்று பூர்த்தி செய்யப்பட்டு அந்தந்த முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ச-5)

## முத்துமாரியம்மன் தாக்கப்பட்டமைக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் கண்டனம்

(கொழும்பு)

கொழும்பு கிராண்ட்பாஸ் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் தெய்வ சிலைகளை சேதப்படுத்தியிருக்கும் செயலை அகில இலங்கை இந்து மாமன்றம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இது தொடர்பாக இந்து மாமன்றம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

பொதுவாக இதுபோன்ற அநாகரிகமான வன்செயல்கள் மத வழிபாட்டுத் தலங்களில் இடம்பெறுவது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இனத்துவேச, மதத்துவேச நிகழ்வுகள் நடக்காது கட்டுப்படுத்துமாறு அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்.

மேற்படி ஆலயத்தில் நடந்த வன்செயலை காவல் துறையினரும் நீதிமன்றமும் உடனடியாக வே கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதையிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் ஓரளவு திருப்தியடைகிறது என்றுள்ளது. (ச)


உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

FedEx Express

(யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்)

வாடிக்கையாளரின் நலன்கருதி

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.

கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

HNBL Money Master

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)



கலாலயா பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

* **3 மாத கால** கேக் ஐசிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம், பப்றிக் வர்ணம் தீட்டுதல், பூவேலை, கைவேலை, Saree Work.

மேற்படி பயிற்சிக்காலத்தின் நடுப்பகுதியில Facial, மணமகள் அலங்கார வகுப்புகள் ஆரம்பமாகும்.

* தையல் அடிப்படை அறிவு அற்றவர்களுக்கான **6 மாத கால** உடை தயாரித்தல் வகுப்புகள்.
* தையல் தெரிந்தவர்களுக்கான **இருவாரகால** சாறி பிளவுஸ், பஞ்சாபி, கவுண், சட்டை, Skirts தைத்தல்.
* **இருவாரகால** சேலையில் வர்ணம் தீட்டல் (Saree Painting) வகுப்புகள்.

சனி ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 14-09-2008

கிழமைநாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 15-09-2008

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.

## மஹோற்சவம்

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய மஹோற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றது. இதில் 10 ஆம்திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு மஞ்சத்திருவிழாவும், 11ஆம்திகதி வியாழக்கிழமை மாலை 5மணிக்கு கைலாசவாகனமும், மறுநாள் பிற்பகல் 2மணிக்கு தண்டாயுதபாணி உற்சவமும், 13 ஆம்திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் காலை 9மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை 4.30 மணிக்கு கொடியிறக்கமும், 16 ஆம் திகதி பூங்காவனமும் நடைபெறவுள்ளது. ஏனைய நாட்களில் தினமும் காலை 8மணிக்கும், மாலை 3 மணிக்கும் அபிஷேகத்துடன் திருவிழா ஆரம்பமாகும். (ஓ)

## ஆன்மீக நிகழ்வு

தொண்டைமானாறு அருள்மிகு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையால் நடாத்தப்படும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் ''ஸ்கந்தஷ்ய கீர்த்திம்'' என்ற தல்லப்பில் சிவத்திரு வ.குமாரசாமி ஐயர் சிறப்புச்சொற்பொழிவாற்றுவார். (ஓ-36)

## சாரணர் மாவட்டங்களின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் சாரணர் மாவட்டங்களின் பெருவிளையாட்டு பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மானிப்பாய் நவோதய ஞாபகார்த்த ஆங்கில பாடசாலையில் வட மாகாண சாரண ஆணையாளர் த.நா.போஜன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம், யாழ்.அரச செயலக திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக கே.சிவசோதிலிங்கம், எஸ். குயின்ஸ்ரன் அவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

# சமுர்த்தி நிவாரணத்தின் தொகையை அதிகரிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம் நாவாந்துறை சென் மேரிஸ் பகுதியைச் சேர்ந்த சமுர்த்தி நிவாரணம் பெறும் 150 குடும்பங்கள் தமது சமுர்த்தி நிவாரணத்தின் தொகையை அதிகரித்து தருமாறு கோரி கடந்த புதன்கிழமை காலை 9மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளதோடு ஊர்வலமாக யாழ்.ஈ.பி.டி.பி. தலைமை பணிமனைக்கு சென்று யாழ்.மாவட்ட அமைப்பாளர் சில்வேஸ்திரி அலன்ரினை (உதயன்) நேரில் சந்தித்து தமது மகஜரை கையளித்துள்ளனர்.

இது விடயமாக மாவட்ட அமைப்பாளரினால் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு உடனடியாக அமைச்சர் தொலைபேசி ஊடாக பொதுமக்களுடன் கலந்துரையாடி இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார். (ஓ)




அண்மையில் நடைபெற்ற பாலர் கல்விக் கழக நிர்வாகத்திலுள்ள ஞானக்குழந்தை இல்லங்களின் விளையாட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி சந்திராதேவி சுபாஸ்சந்திரன் (சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்) மங்கல விளக்கேற்றுவதையும் மற்றும் விருந்தினர்களையும். கழக உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.

## சாட்டி யாத்திரைத்தல பெருவிழா

(ஊர்காவற்றுறை)

தீவக யாத்திரைத்தலமாக விளங்கும் சாட்டி புனித - சிந்தாத்திரை அன்னையின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலை 4மணிக்கு ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை திருநாள் திருப்பலியும் அன்னையின் தேர்ப்பவனி ஆசீர் ஆகியவற்றுடன் திருவிழா நிறைவு பெறும். (ஓ-72)

## அன்னை மரிமாதா திருவிழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுருவில் அன்னை மரிமாதா திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30மணிக்கு திருநாள் திருப்பலி அருட்பணியாளர் சோபரூபன் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ளது. வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (ஓ-72)

## கண்காட்சி

ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் அறக்கொடை நிதியம் , 2008 ஆம் ஆண்டு சர்வதேச சிறுவர் தினத்தை கொண்டாடும் முகமாக நடாத்தும் அரியாலை, சித்தங்கேணி, பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள விசேட பாடசாலைகளில் கல்வி கற்கும் பாதிக்கப்பட்ட 350 இற்கும் மேலான சிறார்களின் சித்திரம், கைவேலை செயற்பாடுகளின் கண்காட்சி இன்றும், நாளையும் யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரையும் நடைபெறவுள்ளது. (ஓ)

# குடாநாட்டில் சேவையாற்ற தமிழ் வைத்திய அதிகாரிகள் முன்வராமை வேதனை தருவதாகும்

## -வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவிப்பு

(காரைநகர்)

யாழ்.குடாநாட்டிற்கான வைத்திய அதிகாரிகளிற்கு அகில இலங்கை ரீதியாக விண்ணப்பம் கோரப்பட்டபோதும் தமிழ் வைத்திய அதிகாரிகள் விண்ணப்பிக்காமை வேதனையான விடயமாகும் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் கிராமிய வைத்தியசாலைக்கு கனடாவில் வசிக்கும் காரைநகர் வாசியான தம்பிராஜா விஸ்வலிங்கம் என்பவரால் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான பற்சிகிச்சை உபகரணம் ஒன்றினை அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு கடந்த 2ஆம் திகதி காரைநகர் கிராமிய வைத்தியசாலையில் நடைபெற்றபோது கலந்துகொண்ட பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி சு.சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன், புற்றுநோய் வைத்திய நிபுணர் ந.ஜெயக்குமார், பல்வைத்திய நிபுணர் எஸ்.அகிலன், காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் வே.குமாரசுவாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் உரையாற்றுகையில் பிரதேச மக்களுக்கு அந்தந்த பிரதேசத்திலே சுகாதார சேவைகள் கிடைக்கக் கூடியதான நடவடிக்கைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனாலும் யாழ். குடாநாட்டு வைத்தியசாலைகள் பலவற்றில் நிரந்தரமான பல் வைத்திய நிபுணர்கள் இல்லை. இக்குறைபாடு தொடர்பாக நேரடியாக அமைச்சிடம் முறையிட்டேன்.

இந்நிலையில் குறித்த வைத்திய நிபுணர்களிற்காக விண்ணப்பம் கோரப்பட்டபோதும் மூன்று தமிழ் பல் வைத்திய நிபுணர்கள் மட்டுமே விண்ணப்பித்திருந்தனர். ஏனையோர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்ற விருப்பமின்மையால் விண்ணப்பிக்க தவறிவிட்டனர். இந்நிலை வேதனையான விடயமாகும்.

எங்கள் மண்ணில் படித்து எங்கள் மண்ணிற்கே கடமையாற்ற மறுப்பது மேலும் வேதனையைத் தருகிறது. வேலை கிடைத்தால் தென்னிலங்கையில் கிடைக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் வேலை கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை என தனியார் வைத்தியசாலைகளில் பணிபுரிகின்றனர்.

இந்நிலை மாற்றப்பட்டு பல வைத்திய நிபுணர்களை நியமிக்க வலியுறுத்த வேண்டும். இதில் அமைச்சினை குறை கூறமுடியாது.

தற்போது தென்னிலங்கையில் மேலதிகமாக வைத்திய அதிகாரிகள் கடமையாற்றுகின்றனர். அதனால் இனிவரும் நியமனங்கள் அனைத்தும் இங்கு நடைபெற்றும் குறிப்பாக ஒரு வருடத்திற்குள் நிவர்த்தி செய்யப்படும்போது நிரந்தரமாக அனைத்து வைத்தியசாலைகளிற்கும் பல்வைத்திய நிபுணர்களை நியமிக்க முடியும்.

தென்பகுதியுடன் ஒப்பிடும்போது வைத்திய சேவையில் சுமார் 25 வருடங்கள் பின்தங்கிய நிலையிலேயே நிற்கின்றோம். அரசின் நிதி ஒதுக்கீடு குறைவாகவே உள்ளது. இதனைப் பயன்படுத்தி வைத்தியசாலைகளை புனரமைக்கப் போதுமானதாகவில்லை. இந் நிலையில் புலம்பெயர்ந்த மக்கள் உதவினால் மட்டுமே பிரதேச வைத்தியசாலைகளை புனரமைக்க முடியும். இதற்கு காரைநகர் சுவிஸ் அபிவிருத்திச்சபை முன் மாதிரியாக செயற்பட்டு வருகின்றமை பாராட்டப்படவேண்டியது. அவர்களுக்கு நாம் நன்றியுடையவராக இருக்க வேண்டும்.

இவ்வாறான சேவைகள் நீண்டபலனைத்தரும் இன்றைக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட பற்சிகிச்சை உபகரணத்தின் மூலம் முழுமையான சிகிச்சை அளிக்கக் கூடியதாகவுள்ளது எனவும் தெரிவித்தார்.

உதவி அரச அதிபர் இ.த. ஜெயசீலன் உரையாற்றும்போது புலம்பெயர் அன்பர் ஒருவரின் இவ் உபகரண அன்பளிப்பினால் முழுமையான பூரணப்படுத்தப்பட்ட பற்சிகிச்சை அளிக்கக் கூடியதாக உள்ளது. இதற்கு எமது பணி மனை சார்பாக பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன்.



எமது அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ள முடியாத சில அபிவிருத்திக்களை புலம் பெயர் மக்கள் மேற்கொள்ள முன் வரவேண்டும்.

இன்றைய இவ் உபகரண அன்பளிப்பானது காலம் அறிந்து செய்த உதவியாகும். எதிர்காலத்தில் இம் மருத்துவ ரீதியான முயற்சிகளிலேயே கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

எமதுபிரதேசம் வளம் குறைந்த பிரதேசம் என்று இனியும் கூறிக்கொண்டிருக்காது இடம்பெயர்ந்தவர்கள் அனைவரும் மீளக் குடியமரக் கூடியதாக அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும்.

தற்கால சூழலில் நொந்து போயுள்ளவர்களை தேற்றக்கூடிய இவ் உதவியைப் போல மேலும் பல உதவிகளை மேற்கொள்ள முன் வரல் வேண்டும் என்று கூறினார். (ஓ-246)

## வாரம் ஒரு தகவல்

### பார்த்த ஞாபகம்

"எனக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகம் சேர்!"

"என்ன சந்தேகம்?"

"ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் முகத்தைப் பார்த்து இவன் இன்னார் தான் என்று அடையாளம் கண்டுபிடிக்கிறான்... மிருகங்களுக்கு எல்லா முகமும் ஒரே மாதிரித் தானே இருக்கிறது. அதெல்லாம் எப்படி அடையாளம் கண்டுகொள்கிறது?"

"அது அதுக்கு ஒரு டெக்னிக் இருக்கிறது! கரடிகள் என்ன செய்யும் தெரியுமா? தங்கள் குட்டிகளை நாக்கினால் நக்கும். பின் இரை தேடப் போகும். திரும்பி வந்ததும் குட்டிகளை முகர்ந்து பார்க்கும். தனது உமிழ்நீர் வாசனையை வைத்து இதுதான் தன்னுடைய குட்டிகள் என்று அடையாளம் கண்டு கொள்ளும்"

அமெரிக்காவில் ஓர் ஆராய்ச்சியாளர் புதிதாக குட்டிபோட்ட ஒரு தாய்க் கரடிக்கு தூக்க மருந்து கொடுத்துத் தூங்கவைத்தார். பின்னர் அதன் மூக்கில் தலைவலித் தைலத்தை தடவிவிட்டார். அந்தக் கரடியின் குட்டிகளுடன் அநாதையாக தவித்துக் கொண்டிருந்த இன்னொரு கரடிக் குட்டியையும் சேர்த்துவிட்டார்.

தாய்க்கரடி தூங்கி எழுந்ததும் அதற்கு தன்னுடைய குட்டிகளை சரியாக மோப்பம் பிடிக்க முடியவில்லை. அநாதைக் கரடிக் குட்டியையும் தன்னுடைய குட்டியாகவே நினைத்து நக்க ஆரம்பித்ததாம்"

"நானும் சில சமயம் அந்தக் கரடி மாதிரி ஆகி விடுகிறேன் சேர்"

"எப்படி?"


"இன்று காலையில் எங்கள் வீட்டு வாசலில் ஒரு சின்னப் பையனைப் பார்த்தேன். அவனை எங்கேயோ பார்த்த ஞாபகமாய் இருந்தது. சரியாக நினைவுக்கு கொண்டு வரமுடியவில்லை. அரைமணி நேரம் கழித்து தான் ஞாபகம் வந்தது!"

"யார் அவன்?"

"ஹி ...என்னோட மகன் தான் சேர்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கருணாஸ் கதாநாயகனாகிறார்



வடிவேலு -விவேக் வரிசையில் நகைச் சுவை நடிகரான கருணாஸும் கதாநாயக னாகி விட்டார். மலையாளத் தில் வெற்றி பெற்ற "வடக்குநோக்கி எந்திரம்" படம் தமிழில் திண்டுக்கல் சாரதி என்ற பெயரில் தயாராகிவருகிறது. இதில் கருணாஸ் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடி யாக அழகுதேவதை கார்த்திகா நடிக்கிறார். படப்பிடிப்பு இடைவேளையில் கருணாஸை சந்தித்தோம். பாதை மாறுவது ஏன்? என்பது பற்றி அவர் சொன்னார். " அழாகாய் இருக்கிற மனைவி சராசரியான கணவன். அவனுக்குள் தன்னைப்பற்றி தாழ்வு மனப்பான்மை ஏற்படுகிறது. இதுதான் இந்தப் படத்தின் கதை. எனக்குப் பொருத்தமான கதை என்று கருதி, கதாசிரியர் சீனிவாசன் நான்கு ஆண்டுகளுக்கு முன்பே என்னைக் கதாநாயகனாக நடிக்கச் சொன்னார்.அப்போது நடித்திருந்தால் முந்தியிருப்பேன். ஆனால் நான் தான் தள்ளிப்போட்டு வந்தேன். யார் வேண்டுமானாலும் கதாநாயகனாக நடிக்கலாம். ஆனால் ஜனங் களை சந்தோஷப்படுத்தணும், அந்த அளவுகோலை சரியாகத் தேர்ந்தெடுத்தால் போதும், வெற்றியும் சரியாகக் கிடைக்கும். படத்தில் நடிக்கிற கதாநாயகன், நாயகி, வில்லன், காமெடியன் என யாருக்கும் தனித்தனியாக நடிப்புக்கிடை யாது. நடிப்பு ஒருபெதுாதுவான விஷயம். ஆனால், அவரவ ருக்கு சரியான கதை கிடைக்க வேண்டும். நான் இதுவரை 60 படங்கள் நடித்து முடித்துவிட்டேன் என் சிரிப்பை ரசிக்க ஒரு வட்டம் உண்டு. அந்த வட்டத்தின் மீது நம்பிக்கை வைத்து இந்த ஓட்டப் பந்தயத்தில் இறங்கியிருக்கிறேன்.என் மனைவி யும் சரி, சக நடிகர்களும் சரி. "ஏன் இந்த வேண்டாத வேலை உனக்கு?" என யாரும் இதுவரை சொல்லவில்லை. அது ஒன்றே போதும் என நினைக்கிறேன் என்கிறார் கருணாஸ் உற்சாகமாக!

# ஜெயம்கொண்டான் சினி விமர்சனம்

நட்சத்திரங்கள்:- வினய், விவேக், சந்தானம், கிஷோர் குமார், ஹனிபா, பாவனா, லேகா வாஷிங்டன் மற்றும் பலர்
கதை,திரைக்கதை, இயக்கம் :- ஆர்.கண்ணன்.
தயாரிப்பு:- சத்யஜோதி பிலிம்ஸ்





அண்ணன் தங்கை உறவை மையமாகக் கொண்ட கதை. நாயகன் வினய்யின் தந்தைக்கு, சட்டத்திற்கு புறம்பாக ஒரு குடும்பம் இருக்கிறது. அந்தக் குடும்பத்தின் வாரிசு தான் லேகா வாஷிங்டன். லண்டனிலிருந்து இந்தியா திரும்பும் வினய்யிற்கு, சென்னையில் ஒரு வணிக வளாகத்தை கட்டவேண்டும் என்று ஆசை. அவரது தங்கைக்கோ அமெரிக்கா சென்று கல்வி கற்க ஆசை. இருவருக்கும் தங்கள் தந்தையின் வீட்டை விற்று, ஆசையை அடைய முயற்சி செய்கிறார்கள். இந்தமுயற்சியில் சமூக விரோதியான கிஷோர்குமாரை பகைத்துக்கொள்கிறார் நாயகன். இறுதியில் நாயகன் தன் தங்கைக்காக தன் இலட்சியத்தை விட்டுக் கொடுத்தாரா அல்லது தன் ஆசையை துறந்தாரா அல்லது சமூக விரோதி கிஷோர் குமாரால் திசை திருப்பப்பட்டாரா என்பதை உணர்ச்சிபூர்வமாக சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் கதையும், திரைக்கதையும் அக்னி நட்சத்திரத்தை நினைவுபடுத்துவதால், கதையைத் தேர்வு செய்வதில்

மணிரத்னத்தின் உதவியாளர் தோல்வியை தழுவியிருக்கிறார். பலவீனமான திரைக்கதையினை இன்னும் புதிய காட்சிகளால் மெருகுபடுத்தியிருக்கலாம்.அதிலும் தவறியிருக்கிறார் இயக்குநர். முதல் பாதியில் நாயகனுக்கும், அவனின் தங்கைக்கும் இடையே நடைபெறும் போராட்டம் ரசிக்கும்படியிருக்கிறது.

நாயகி பாவனா, இந்த கதைக்கு எப்படி பொருந்துகிறார் என்று இயக்குநர் தான் விளக்கம் அளிக்கவேண்டும். விவேக் பேசுகிறார். ஆனால் சிரிப்பு தான் வரவில்லை. சந்தானம் கிச்சுகிச்சு மூட்டுகிறார். வில்லனிடம் அடிவாங்கி சிரிக்க வைப்பவர் ஹனிபா. வித்யாசாகர் தன் உழைப்பை சரிவர வழங்கவில்லையோ என எண்ணத்தோன்றுகிறது. பாடல்கள் செவிக்குள் உட்கார மறுக்கிறது. படத்தில் ஒளிப்பதிவும், வசனமும் சிறப்பாக அமைந்திருக்கின்றன. இதற்காக ஒளிப்பதிவாளர் பாலசுப்ரமணியத்தையும், வசனகர்த்தா பட்டுக்கோட்டை பிரபாகரையும் வாயார பாராட்டலாம். வில்லனாக வரும் கிஷார்குமார் இயக்குநர் சொல்லிக் கொடுத்திருப்பதை திருப்பி செய்திருக்கிறார். தலைவாசல் விஜய் தன் கதாபாத்திரத்தின் தன்மையை உணர்ந்து நடித்திருப்பதால் பாராட்டைப் பெறுகிறார். பாடல்காட்சிகள் படமாக்கப்பட்டதிலும் கற்பனை வறட்சி தெரிகிறது. மணிரத்தினத்தின் உதவியாளர் இயக்கியிருக்கும் படம் என்று எதிர்பார்த்து வருவோரை திருப்திபடுத்தாமல் வெளியே அனுப்புகிறார் இயக்குநர். நாயகன் வினய் இந்த பலவீனமான கதையை தன் தோளில் சுமந்து, வெற்றி எல்லையை தொட்டிருக்கிறார். இது இயக்குநரின் படமல்ல, நாயகன் வினய்யின் படம் என்று சொல்ல வைத்திருக்கிறார்.

# கனகவேல் காக்க படத்தில் டூப் போடாத கரண்



ஆகர்ஷனி தியேட்டர்ஸ் பட நிறுவனம் சார்பில் சரவணா ஆர். தயாரிக்கும் படம் "கனகவேல் காக்க" கரண் இப் படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். கதை, திரைக் கதை, எழுதி இயக்குகிறார் கவின்பாலா. இவர் இயக்குநர்கள் சரண், ஹரி ஆகியோரிடம் இணை இயக்குநராகப் பணியாற்றியவர்.

அக் காட்சியில் நாற்பது அடி உயரமுள்ள கிரேனிலிருந்து கரண் கீழே குதிப்பது போன்ற காட்சியை அமைக்க திட்ட மிட்டிருந்த ஸ்டண்ட் மாஸ்டர் ராக்கி ராஜேஷ், ஸ்டண்ட் நடிகர் ஒருவரையும் தயார் நிலையில் வைத்திருந்தார். ஆனால், கரணோ தனக்கு டூப் வேண்டாம் என்று சொல்லி, நாற்பது அடி உயரத்திலிருந்து அவரே கீழே குதித்தார். இக் காட்சி ஒரே டேக்கில் ஓகேயாக, ராக்கி ராஜேஷ், ராஜ்கபூர், இயக்குநர் கவின் பாலா உட்பட ஒட்டுமொத்த படப்பிடிப்புக் குழுவினரும் கரணை பாராட்டினார்களாம். ஆயுதத்திலே மிகப்பெரிய ஆயுதம் மௌனம்தான், அந்த மௌனம் கலைக்கப்படும் போது ஏற்படும் கலவரம் போர்க் களத்துக்கு இணை யானது. அப்படி ஒரு அதிரடியான படம் தான் "கனகவேல் காக்க" இதுவரை கரண் நடித்த படங்க ளிலேயே அதிக செலவு செய்து தயாரிக்கப் படுகிறதாம்.




# விக்ரம் - ஐஸ்வர்யா நடிப்பில் உருவாகும் "ராமாயணம்"





மணிரத்னம் இயக்கும் புதிய தமிழ்- இந்தி இரு மொழிப் படத்தில் ஐஸ்வர்யாவுடன் ஜோடியாக நடிப்பதை உறுதிப்படுத்தியுள்ளார் நடிகர் விக்ரம் .

ரூ.120 கோடி பட்ஜெட்டில் மணிரத்னம் பிரமாண்டமாக உருவாக்கும் இந்திப் படம் ராவண், இராமாயணக் கதையின் நவீன வடிவமாக மணிரத்னம் இயக்கும் இந்தப் படத்தில் அபிஷேக்பச்சன்-ஐஸ்வர்யாராய் நடிக்கிறார்கள்.

இதே படத்தின் தமிழ் பதிப்பில் விக்ரம்- ஐஸ்வர்யா ஜோடி சேர்கிறார்கள். அபிஷேக்பச்சன் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இதுபற்றி விக்ரம் கூறியபோது, "மணிரத்னம்" சாரின் இந்திப் படத்திலும் நான் முக்கிய வேடத்தில் நடிக்கிறேன். ஆனால், அந்த வேடம் பற்றி என்னால் எதுவும் கூறமுடியாது. ஆனாலும், ஒரு சின்ன ஏக்கம் முதல் முதலாக நான் நடிக்கும் இந்திப் படத்தில் ஹீரோவாக நடிக்க முடியவில்லையே என்பது தான் ஆனால், மணிரத்னம் போன்ற ஜாம்பவான் படத்தில் எந்த வேடமும் தரமானதாகத் தான் இருக்கும். அதன் தமிழ் பதிப்பில் நான்தான் ஹீரோ. ஐஸ்வர்யாராய் தான் நாயகி. அபிஷேக், ஐஸ்வர்யா இருவரையும், எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களுடன் சேர்ந்து நடிப்பது புதுஅனுபவம். குறிப்பாக உலக அழகி ஐஸ்வர்யாராயுடன் நடிப்பது எனக்குக் கிடைத்த எதிர்பாராத பரிசு" என்றார்.

# "மகேஷ் சரண்யா மற்றும் பலர்"




"பிடிச்சிருக்கு" என்ற படத்தை தயாரித்த கூல் புரொடக்ஷன்ஸ் நிறுவனத்தின் அடுத்த தயாரிப்பு "மகேஷ் சரண்யா மற்றும் பலர்" இந்தப் படத்தைப் பற்றி பேசிய இயக்குநர் பி.வி.ரவி., பொதுவாக காதல் கதைகள் என்றால் ஒரு காதல் அதற்கு எதிர்ப்பு, தடைகள், அதை மீறிக் காதல் வெற்றிபெறுவது.. என ஒரு சூத்திரத்திற்குள் அடங்கி விடும். ஆனால் நான் இயக்கும் இந்தப் படத்தை இதிலிருந்து முற்றிலும் வித்தியாசமாக அமைத்திருக்கிறேன். அழகான காதல், அதைக் கொண்டாடும் குடும்பம், அவர்களுக்குள் நடைபெறும் சுவாரசியமான சம்பவங்கள் என காதலுக்கு எதிர்ப்பும், தடைகளும் இல்லாத ஒரு கதைக்களத்தை தெரிவு செய்திருக்கிறேன். இந்தத் திரைப்படம் வெளியான பின் ரசிகர்களின் ரசனையை மாற்றிவிடும் தன்மையை இந்தக் கதை பெற்றிருக்கிறது என்று உறுதியாகக் கூறுவேன். இந்தக் கதையில் நாயகன் ஷக்தி ஒரு கல்லூரி மாணவன். நாயகி சந்தியா ஒரு மேடை பாடகி. இவர்களுக்குள் ஏற்படும் இயல்பான ஈர்ப்பு, காதலாக மாறுகிறது.

உச்சக்கட்ட காட்சி, யாரும் எதிர்பாராதது. இந்தப் படத்தில் இடம்பெறும் எட்டுப் பாடலையும் எண்சுவையுடன் தந்திருக்கிறார் இசையமைப்பாளர் வித்யாசாகர். தயாரிப்பாளர் சி.த.செண்பககுமார், ஒரு வணிகராக இல்லாமல் நல்ல கலாரசனைமிக்கவராக இருப்பது எனக்கு கிடைத்த பாக்கியம் என்கிறார். இவர் லிங்குசாமியின் உதவியாளர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் திரைப்படத்திற்கு கே.குணசேகரன் ஒளிப்பதிவு செய்கிறார்.

# சினித்துளிகள்



ஹரி இயக்கத்தில் பரத் நடித்து வரும் "சேவல்" என்ற படத்தைத் தொடர்ந்து, பரத் நடிக்கும் அடுத்த படத்தை கரு. பழனியப்பன் இயக்குகிறாராம்.

கஞ்சா கறுப்பு தனது சம்பளத்தை நாளொன்றிற்கு ஒன்றரை இலட்சமாக உயர்த்தி விட்டாராம்.

'பந்தயம்' படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்கும் விஜய்க்கு, அரசியல் நொடியுடன் 'பஞ்ச்' வசனங்களை வைத்திருக்கிறாராம் இயக்குநர் எஸ். ஏ.சந்திரசேகர்.

"குசேலன்", "சத்யம்" ஆகிய இரண்டு படங்களும் எதிர்பார்த்த வெற்றியைப் பெறாததால் சோகத்தில் மூழ்கியுள்ளாராம் நயன்தாரா. காரணம் தனது சம்பளத்தை குறைத்து விடுவார்களோ என்ற அச்சம்.

"சுப்ரமணியபுரம்" நாயகன் ஜெய்யிடம் அபாரமான இசை ஞானம் இருக்கிறது. அதை இயக்குநர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சான்று அளிக்கிறார் இயக்குநர் வெங்கட்பிரபு.

"வெடிகுண்டு முருகேசன்" என்ற படத்தைத் தொடர்ந்து பசுபதி நாயகனாக நடிக்கும் திரைப்படத்திற்கு "செல்ல மழை" என்று பெயரிட்டிருக்கிறார்கள். இதனை சோழா கிரியேசன்ஸ் தயாரிக்கிறது. படத்தை பாக்யராஜின் உதவியாளர் பாலு இயக்குகிறார்.

சரோஜா திரைப்படம் இருபத்திநான்கு கோடி ரூபாவுக்கு வியாபாரம் ஆனதாக ஒரு தகவல் இயக்குநர் தரப்பிலிருந்து பரவியுள்ளது.

# நோத் முதல் கோபல்லவா வரை 91



### இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம்

தமிழர் பொன் குமாரசுவாமியையே மறுபடியும் ஆள்பதி அவர்கள் நியமித்தல் வேண்டும் எனக் கோரி றொக்வுட் அவர்கள் தலைமையில் மாபெரும் கூட்டம் கூடி ஏகமனதாக தீர்மானித்தார்கள். ஒரு சிலர் பிறிட்டோ அவர்களின் மருகர் சுவாமிநாதன் அவர்களையே நியமித்தல் வேண்டும் எனக் கோரினர். எனவே ஆள்பதி அவர்கள் றொக்வுடன் அவர்களை இரகசியமாய்த் தம் அரண்மனைக்கு அழைத்து அவர் மனத்தை மாற்றி அவரையே பிரதிநிதியாக நியமித்தார். றொக்வுட் அவர்கள் 13.3.1898 முதல் 13.3.1903 வரை அங்கத்துவம் வகித்த பின் பொன்குமாரசுவாமி அவர்களே 15.3.1903 முதலாக மறுபடியும் நியமனம் பெற்றார்.

குமாரசுவாமி அவர்கள் ஆள்பதியின் போக்கை வழிப்பறிக் காரனின் போக்கு என்று கூறியதை ஆள்பதி அவர்களும் அவர் சார்பான அரசாங்கமும் சட்டை செய்யாமல் விடவில்லை. அதற்கு விளக்கம் கூறுமாறு குமாரசுவாமி அவர்களைக் கேட்டனர். அதற்கு அவர் எள்ளவும் அஞ்சாது ஆணைச் சபையொன்றை நியமித்தால் அச்சபையினர் முன் தான் கூறியதை விளக்கலாம் என்று கூறினார். அதற்கு மேல் ஆள்பதி அவர்களால் ஒன்றுஞ் செய்ய இயலவில்லை. அவ்வளவில் அவ்வலுவல் ஆறித்தணிந்தது என்றாலும் ஆள்பதியின் மனக்கொதிப்பு ஆறாமலே இருந்தது என்பது அடுத்த நியமனத்தில் தெற்றெனப் புலப்பட்டது பொன்குமார சுவாமியவர்கள் 1906ஆம் ஆண்டில் இறந்த பின் அவருடைய இடத்தில் அம்பலவாணர் கனகசபை அவர்கள் நியமிக்கப் பெற்றார் கள்.

*நீதியே திறம்பா வண்ணம்*
*நெடுகவே எடுத்துக் கூறித்*
*தீதெலா மகற்றித் தெய்வத்*
*திருவெல்லாம் மன்றம் பூப்ப*
*வாதமே புரியவல் லோன்*
*வசையிலா இசையே பூண்டோன்*
*காதலர் குமாரசுவாமிக்*
*கண்ணியன் வாழ்க மாதோ*

ந.கி.பாரதி

**மீன் பார்வை**



தென்னைத்தோட்டங்களில் வேலைசெய்கின்ற தொழிலாளர்கள் (BRITISH LIBRARY-1895)

காடுகெடுத்து நாடாக்கும் முயற்சி நல்ல முறையில் நடைபெற்றது. தோட்டத்தின் பொருட்டும், சேனைச் செய்கையின் பொருட்டும், விறகின் பொருட்டும் காடுகள் அழிக்கப் பட்டன.

அதனைத் தொடர்ந்து இலங்கை பல துறைகளிலும் முன்னேற்றம் அடைந் தது. அகன்ற வீதிகள், பாலங்கள், புகை வண்டிப் பாதைகள் யாவும் திருத்திய முறை யில் செப்பமிடப்பட்டன. தேயிலை, கொக்கோ, சிங்கோனா, தென்னை, புகையிலை பெருந் தொகையாகப் பயிரிடப்படலாயின. நெற் செய்கைக்கு ஏற்ற முறையில் நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டன. தந்தி, தபால் சாதனங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டன.

காலக் கழிவினால் ஏற்படும் மாறுதல்களுக்குத் தக்கதாக சன சமுதாய வாழ்வும், தனிவாழ்வும் கட்டாயமாக மாறுதலடைய வேண்டியனவே. எனவே அரசாங்கத்தின் உபபிரிவுகளும் உட்பிரிவுகளுமான திணைக்கள வேலைகள் அலுவல்கள் ஒவ்வொன்றும் முன்னேற்றத்துக்குத் தக்கதாக உழைக்கவாரம்பித்தன. அரசாங்கமும் முன்னேற்றத்துக்காவன செய்தது.

**க.சி.குலரத்தினம்**

இக்காலத்து மாற்றங்களுக்கு உபந்தையாகவும் காரணமாகவும் இருந்தவர் ஆள்பதி றிச்வே அவர்களாவர். றிச்வே அவர்கள் காலத்தில் அரசாங்க உத்தி யோகத்தர் பலவழிகளிலும் அனுகூலம டைந்தனர். அவர்கள் ஏற்ற முறையில் உத்தி யோகப் பயிற்சி பெற்றமையோடு உயர்ந்த வேதனமும் பெற லாயினர்.

ஆள்பதி மக்கலம் அவர்கள் ஆட்சிக் காலத்திலே கிளறிக்கல் எனப்படும் எழுது வினைஞர் சேவையில் ஏராளமான இளைஞர்கள் சேர்ந்தார்கள்.

அச் சேவையில் பொதுச் சேவை றெயில்வே சேவை,தபாற் சேவை எனப் பல பிரிவுகள் இருந்தன. அவற்றில் திறமையாக வேலை செய்தவருக்குக் காலந் தோறும் வகுப்புயர்ச்சியும் வேதனவுயர்ச்சியும் படிப்படியாக வழங்கப்பட்டன. (தொடரும்)

# பூர்வீக நிலத்தையும் பாரம்பரியத்தையும் இழந்து நிற்கும் இலங்கையின் ஆதிக்குடிகளான 'வன்னியலா -எத்தோ'

**மகாவம்சம் கூறும் வரலாற்றுக் குறிப்புகள்**

1.கி.பி. 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மன்னன் தாதுசேனன் மகாவலி கங்கையை மினிப்பேவுக்கு திசை திருப்ப மினிப்பே கால்வாயை அமைத்தார். சுமார் 47 மைல்கள் நீளம் கொண்ட இத் திட்டத்திற்கு அவருக்கு பெருந்துணை புரிந்தவர்கள் Yakkas என்றழைக்கப்பட்ட வன்னியலா- எத்தோ. இக் கால்வாயை மகாவம்சம் Yaka-bendi-ela என்றே குறிப்பிட்டுள்ளது.

2. கி.மு. 2ஆம் நூற்றாண்டில் மன்னன் துட்டகைமுனு ருவன் வெலிசாய தாதுகோபுரத்தைக் கட்டும்பொழுது பல உணவுப் பொருட்களையும் ஏனைய கட்டுமானப் பொருட்களையும் விநியோகித்தவர்கள் வன்னியலா - எத்தோ இனத்தவர்.

3. கி.பி.17 ஆம் நூற்றாண்டில் 2ஆம் இராஜசிங்கன் டச்சுப் படைகளுக்கு எதிரான போரில் தனியே வேடர் படைப் பிரிவொன்றையே வைத்திருந்தாராம்.

4. 1817 -1818 இற்கு இடைப்பட்ட காலத்தில் பிரித்தானிய படைகளுக்கு எதிராக ஊவா- வெல்லச பகுதியில் கெப்பட்டிபொல திஸாவயல் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சியில் வேடர்களும் இணைத்துகொள்ளப்பட்டிருக்கின்றனர்.

இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம் இனத்தவர்களின் பெயர் பதியப் படமுன்னர் ஆதிக்குடிகளாக இருந்து வனாந்தரங்களை காத்து அன்னிய படையினருக்கு எதிராக கிளர்ச்சிகளிலும் பங்கெடுத்து வரலாற்றில் இடம்பிடித்துள்ள வன்னியலா - எத்தோவின் தற்போதைய நிலைமை பரிதாபகரமான நிலையில் உள்ளது.

இவர்களின் பாரம்பரியங்கள், பண்பாடுகள் பாதுகாக்கப்பட வேண்டியவை. ஆதிக்குடிகள் என்ற அந்தஸ்தோடு மீண்டும் இவர்கள் வனாந்தரங்களில் சுதந்திரமாக சுற்றிவரும் காலம் எப்போது வரும் என்று கேள்விக்குறியாகவே உள்ளது.

"நான் சிறு வயதாக இருக்கும்போது அனுபவித்த சுதந்திரத்தை இப்போது மீட்டுப் பார்க்கிறேன். அந்த வனாந்தரத்தில் சுற்றித் திரிந்தது, தேன் சேகரித்தது, வேட்டையாடியது, இறைச்சி உண்டது. எமக்குத் தேவைப்படும் மருத்துவ மூலிகைச் செடிகளை ஆராய்ந்தது எனக் கூறிக் கொண்டே போகலாம். எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லாது நாம் சுற்றித் திரிந்தோம்.ஆனால் இப்போது அப்படியல்ல. எமது நிலத்தை, சுதந்திரத்தை, பாரம்பரியத்தை இழந்து கொண்டிருக்கிறோம்" இவ்வாறு ஏக்கத்தோடு கூறியிருப்பவர் இலங்கையின் ஆதிக்குடிகளான *வேடர்கள்* என்று நாம் அழைக்கும் வன்னியலா எத்தோக்களின் தற்போதைய தலைவர் உருவரிகே வன்னியலா எத்தோ. இவர் முன்னாள் தலைவரான பிரபல திஸாஹாமியின் மகனாவார்.

பெரும்பாலான உலக நாடுகளில் அந்தந்த நாடுகளின் ஆதிக்குடிகள் அல்லது பழங்குடியின மக்கள் இன்னமும் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களை நினைவுபடுத்தும் முகமாகவும் அவர்களின் பாரம்பரியங்களைப் போற்றி பாதுகாப்பதோடு வனாந்தரங்களின் காவலர்களாக விளங்கும் இவர்களை கௌரவிப்பதற்காக சர்வதேச பழங்குடியின மக்கள் தினம் ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் 9 ஆம்திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இலங்கையின் ஆதிக் குடிகளாக விளங்கும் வேடர்கள் (சிங்கள மொழியில் வெத்தா -Vedda) அன்றைய தினம் நினைவு கூரப்பட்டனர். தற்போது இலங்கையில் வாழும் ஆதிக் குடிகளாக கருதப் படும் இவர்களை நாம் 'வேடர்' என்று அழைத் தாலும் இவர்கள் தங்களை வன்னியல - எத்தோ (Wanniyala -Aetto) என்றே குறிப்பிடு கின்றனர். இதன்பொருள் "காட்டைச் சேர்ந்தவர்கள்" அல்லது காட்டில் வாழ்பவர்கள் என்பதாகும்.இலங்கையில் வாழும் மூவின மக்களிடம் இருந்து வாழ்க்கை முறை, கலாசாரம், உணவுப்பழக்க வழக்கம் என்பவற்றில் முற்றாக வேறுபட்டவர்களாக இவர்கள் விளங்கினாலும் முன்னைய அரசாங்கங்கள் கொண்டு வந்த சில அபிவிருத்தித் திட்டங்களால் காட்டுப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டு இலங்கையின் வட மத்திய மற்றும் ஊவா மாகாணத்தில் சிங்கள மக்களுடனும் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுடனும் கலந்துவிட்டனர் என்றே கூறவேண்டும்.

தமக்கென்ற பிரத்தியேக பேச்சு மொழியைக் கொண்டிருந்த இவர்கள் தற்போது சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளையும் பேசுகின்றனர்.

வரலாற்றைத் தேடிப் பார்க்கும் போது இலங்கையின் பூர்வீக குடிகளாக இருக்கும் இவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ச்சி செய்த மன்னர்களுக்கு ஆதரவாகவிருந்து சண்டையிலும் பங்கேற்றுள்ளனர் என்பது தெரிய வரும்போது ஆச்சரியமாக உள்ளது. இவர்களின் வரலாறு, வாழ்க்கைமுறை, தற்போது எதிர்நோக்கும் சிக்கல்கள் என்பன குறித்து பார்ப்போம்.

**வரலாறு**



வன்னியலா- எத்தோக்கள் இலங்கையில் வாழ்ந்த புதிய கற்காலச் சமுதாயத்தின் நேரடி வாரிசுகளாக தம்மை கருதுகிறார்கள். இந்தத் தகவல்களை நாம் பிரபல பிரித்தானிய கப்பல் கேப்டனாக விளங்கிய றொபர்ட் நொக்ஸின் (Robert knox) 'an Historical Relation of the Island Ceylon' என்ற நூலின் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.எமது நாட்டின் பழங்கால.வரலாற்று நூல்களில் குறிப்பிடப்படும் இயக்கர்,நாகர் எனும் இரு இனங்களில் குறிப்பிடப்படும் இயக்கர்கள் இனமே இவர்கள் என்பது ஒருசில ஆய்வா ளர்களின் கருத்து.

முக்கியமாக தென்னிலங்கையில் பெருமளவில் வசித்து வந்த இவர்கள், தமது வாழ்க்கை முறையை கி.பி 5 ஆம் நூற்றாண்டளவில் ஆரம்பித்த ஆரியர் வருகையினால் மாற்றிக் கொண்டதாக குறிப்புகள் கூறுகின்றன. ஆரியர்களின் குடியேற்றத்தினால் பாதிப்புற்ற இவர்களில் ஒரு சிலர் அவர்களுடன் கலந்துவிட்டனர். பெரும்பாலானோர் காடுகளின் உட்பகுதிக்குச் சென்று தமது வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டனர் இவ்வாறு ஒரு ஆய்வு கூறுகிறது.

**-சிவலிங்கம் சிவகுமாரன்**

மற்றுமொரு ஆய்வு குறிப்பிடுவது என்னவெனில் சுமார் 37 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் பழங்குடியினர் இலங்கையின் தற்போதைய இரத்தினபுரி, களுத்துறை, வரக்காபொலை, மாத்தளை,அனுராதபுரம், திருகோணமலை, பொத்துவில் மற்றும் இரணைமடு ஆகிய பகுதிகளில் வாழ்ந்து வந்துள்ளனர்.

இந்தப் பழங்குடியினரில் மூன்று இனத் தவர்கள் இருந்துள்ளார்களென நம்பப்படுகின்றது. யக்ஷா (Yaksha), நாகா (Naga), தேவா (Deva) ஆகிய இனங்களே அவை. தற்போதுள்ள வன்னியலா -எத்தோக்கள் யக்ஷா என்ற இனத்தின் நேரடி வாரிசுகள். (தொடரும்)

# ஹெயிட்டியில் புயல் 500 பேர் பலி

(ஹெயிட்டி)

அட்லாண்டிக் கடல் பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்'' ஹன்னா''என்ற புயல் உருவானது .இந்த புயல் 150 மைல் வேகத்தில் குட்டித் தீவான ஹெயிட்டி தீவை தாக்கியது. இதில் ஆயிரக்கணக்கான குடிசை வீடுகள் காற்றில் பறந்தன.

நூற்றுக்கணக்கானகிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின. பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு ஏராளமான வீடுகள் மண்ணில் புதைந்தன.

இந்த புயல்,மழை மற்றும் நிலச்சரிவு 95க்கும் மேற்பட்டவர்கள் பலியானதாக ஆரம்ப கட்ட தகவல்கள் தெரிவித்தன. ஆனால் இப்போது நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில்தோண்டத் தோண்டஉடல்கள் வந்த வண்ணம் உள்ளது. இதையடுத்து புயல் மழைக்கு பலியானவர்கள் எண்ணிக்கை 500 க்கும் அதிகமாகிவிட்டது.குவியல் குவியலாக உடல்கள்ஆங்காங்கே போடப்பட்டுள்ளன.

ஹெயிட்டி தீவை தாக்கியபுயல் பகாமாஸ் நாட்டையும் பதம் பார்த்தது. அங்கு இந்த புயல் 100க்கும் மேற்பட்டவர்களின் உயிரை பறித்து விட்டது.

ஹெயிட்டி தீவில்புயல் தாக்கிய தினத்தில் தான் புதிய பெண் பிரதமராக மைக் கேலி பீரே லூயிஸ்பதவி ஏற்றுள்ளார்.

உடனடியாகபுயல் பாதித்த பகுதிகளுக்கு சென்று மீட்புபணிகளை தொடங்கபுதிய பெண் பிரதமர் தனது மந்திரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (ஓ)

# பாகிஸ்தானுக்குள் அமெரிக்க இராணுவத்தின் தாக்குதலை தடுத்து நிறுத்த வேண்டும்

## பாராளுமன்றில் ஏகமனதாக தீர்மானம்

ஆப்கானிஸ்தான் நாட்டில் இருந்து பாகிஸ்தான் மீதும் , பாகிஸ்தானியர்கள் மீதும் இராணவ தாக்குதல்நடத்துவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் தஞ்சம் புகுந்து உள்ள தீவிரவாதிகள் அடிக்கடி ஆப் கானிஸ்தான் நாட்டுக்குள் புகுந்து இரா ணுவத்தினர் மீ து தாக்குதல் நடத்திவிட்டு மீண்டும் பாகி ஸ்தா னுக்குள் நுழைந்து தப்பி விடுகிறார்கள். அவர்க ளை ஒடுக்குவதற்கு பாகி ஸ்தரன் அரசு முழுமனதுடன் முன் வரவில்லை. இதனால் அவர்களை ஒடுக்குவதற்காக ஆப் கானிஸ்தானில் தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அமெரிக்க இராணுவம் அடிக்கடி இராணுவ ஹெலிகொப்டர்களை பாகிஸ்தானுக்குள் அனுப்பி தாக்குதல் நடத்தி வருகிறது.

ஆனால் கடந்த புதன்கிழமைஅன்று அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர்கள் பாகிஸ்தானுக்குள் இறங்கின.அதிலிருந்து இறங்கிய இராணுவவீரர்கள் 3வீடுகளுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினார்கள் இதில் 20பேர் பலியானார்கள்.இதற்கு அந்த நாட்டில்கடும் எதிர்ப்புக் கிளம்பியது. பாராளுமன்றத்தில் இந்த பிரச்சினை மீது கடும் விவாதம் நடந்தது. அதன் முடிவில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதில் அன்னிய சக்திகளின்இராணுவ நடவடிக்கைகளை முழு ஆற்றலுடன் தடுத்து நிறுத்த வேண்டும். ஆப்கானிஸ்தானில் தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை நடத்திவரும் சர்வதேச பாதுகாப்புஉதவிப்படை அவற்றை கைவிட வேண்டும் என்று எச்சரிக்கை வேண்டும்.மீண்டும் இது போல நடந்தால்இதுவரை தீவிரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவுடன் கூட்டாளியாக இருந்த பாகிஸ்தான் தன் வெளிநாட்டு கொள்கையை மாற்றிக் கொள்ள நேரிடும் என்றும் எச்சரிக்க வேண்டும் என்றும்அந்ததீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் இறையாண்மையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் காப்பாற்ற அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும் தீர்மானம் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்ததீர்மானம் கடுமையானவார்த்தைகளால் உருவாக்கப்பட்டுள்ளது.இந்ததீர்மானத்துக்கு ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் ஆதரவு அளித்துள்ளது. (ஓ-6)

# பாகிஸ்தானில் ஏவுகணைத் தாக்குதலில் 5 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில்வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில்உள்ள வடக்கு வசீரிஸ்தான் பழங்குடிஇன பகுதியில் உள்ள மொமத்கேல் கிராமத்தில் ஏவுகணை தாக்குதலை அமெரிக்க இராணுவம் நடத்தியது.இதில் 5பேர் பலியானார்கள்.ஆள்இல்லாத போர் விமானம் இந்தஏவுகணைகளை வீசியது. 3 ஏவுகணைகள் ஒரு வீட்டை நோக்கி வீசப்பட்டன.அந்த வீடு பழங்குடி இனத்தைச் சேர்ந்த பெர்மன்டாவர் என்பவருக்கு சொந்தமானது. இந்த விமானம் குறைந்த உயரத்தில் பறந்து வந்தது என்று கூறப்படுகிறது.

அந்த வீட்டை ஏவுகணை தாக்கியதும் வீடு தீப்பிடித்துக் கொண்டது. இதில் 5பேர் பலியானார்கள். அவர்கள் உடல்கள் அந்த வீட்டில் இருந்து எடுக்கப்பட்டன.மேலும் 3பேர் அந்த வீட்டின்இடிபாடுகளில் சிக்கி காயம் அடைந்து கிடந்தனர். அவர்கள் மீட்கப்பட்டனர் அவர் கள் அடையாளம் தெரியவில்லை. அவர்கள் அனைவரும் அரபுக்கள் என்று கூறப்படுகி றது. (ஓ)

# ஜப்பானிய பிரதமர் பதவிக்கு மூவர் போட்டி

(ஜப்பான்)

பதவி விலகுவதாக அறிவித்துள்ள ஜப்பானிய பிரதமர் யஸுவோ புகுடாவின் இடத் திற்கு ஆளுங்கட்சியைச் சேர்ந்த3உறுப்பினர்களிடையே உக்கிர போட்டி நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆளுங் ஜனநாயக விடுதலை கட்சியின்செயலாளர்நாயகம் தரோ அஸோ (67வயது) முன்னாள் பாதுகாப்பு தலைவர் யுரிகோ கொய்கே, பொருளாதார அமைச்சர் கயோரு யஸோனோ ஆகியோரே மேற்படி போட்டிக்களத்தில் இறங்கியுள்ளனர்.

டோக்கியோவின்சர்ச்சைக்குரிய வலது சாரி ஆளுநரின் மகனான நொபு தெரு இஷிஹறாவும் பிரதமர் பதவிக்கு போட்டியிடுவதில் தனக்குள்ள ஆர்வத் தை வெளிப்படுத்தியுள்ளார்.

எனினும் மேற்படி போட்டியாளர்களில் தரோ அஸோவே முன்னணியிலிருப்பதாக கூறப்படுகீறது. இந்நிலையில் கட்சியின் தலைவராக வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுபவரே எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழ மை பிரதமராக பதவியேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

# பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்படும்

## உக்ரேன் ஜனாதிபதி அச்சுறுத்தல்

உக்ரேனின் ஜனாதிபதி விக்டர் யஸ் சென்கோ பாராளுமன்றத்தைக் கலை த் து புதிய தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்போவதாக அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.



ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைக்கும் புதிய சட்ட மூலங்களுக்குஎதிர்ப்பு தெ ரிவிக்கும் வ கை யி ல் ஜ னா தி ப தி ய ஸ் செ ன் கோ வி ன் ஆதரவாளர்கள் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

மேற்படி சட்டங்களானது எதிர்கட்சி ஆதரவு பிரதமர் யூலியா தைமொஷென்கோவால் முன்வைக்கப்பட்டது.

புதிய கூட்டமைப்பு அரசாங்மொன்றை 30நாட்களுக்குள் அமைக்கத் தவறும் பட்சத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்துபுதிய தேர்தலுக்குஅழைப்பு விடுப்பதற்கு தனக்குள்ள அதிகாரத்தை பிரயோகிக்க நேரிடும் என ஜனாதிபதி தொலைக்காட்சிமூலம் நாட்டு மக்களுக்கு ஆற்றியஉரையில் குறிப்பிட்டார்.

உக்ரேனில் அரசியலமைப்பு சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 30 நாட்களுள் புதிய அரசாங்கம் அமைக்கப்படுவது கட்டாயமாகும்.

இந் நிலையில் பிரதமர் யூலியாதைமொஷென்காவி ப ரிக் கை யில் ஜ னா தி பதியின் பொ று ப்பற்ற செயல்குறித்து நா ன் வருத்தமடைகி றேன்.அவரது வழி காட் டலி ன் கீழ் கூட் மை ப்பு அரசாங்கம் சின்னாபின்னமாக நேரிடும் என்று தெரிவித்தார். (ஓ)

# அவுஸ்திரேலியாவின் முதலாவது பெண் ஆளுநர் நாயகம்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் முதலாவது பெண் ஆளுநர் நாயகமாக குவன்ரின் பிரைஸ் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பதவியேற்றார்.

கன்பெராவில் செனட் சம்மேளனத்தில் இடம் பெற்ற இந்த பதவியேற்பு வைபவத்தில் பிரதமர் முன்னணி அரசியல் வாதிகள் நீதித் துறையினர் மற்றும் இராஜ தந்திரிகள் உட்பட பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.

குயீன்ஸ்லான்ட் மாநில முன்னாள் ஆளுநரான குவன்ரின் பிரைஸ் (65வயது) மேற்படி பதவியை கடந்த 5வருட காலமாக வகித்த மேஜர் ஜெனரல் மைக்கேல் ஜெப்ரியை தோற்கடித்துள்ளார். (ஓ-6)

# அணு எரிபொருள் வழங்கும் நாடுகளின் எதிர்ப்பு வேகத் தணிவால் ஒப்பந்தம் நிறைவேற வாய்ப்பு

(வியன்னா)

இந்தியாவுக்கு சலுகை காட்ட வேண்டும் என்ற அமெரிக்காவின் வற்புறுத்தலால் அணு எரிபொருள் வழங்கும் நாடுகள் பணிந்தன. இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்திற்கு பச்சைக் கொடி காட்டும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

அணு ஆயுதப் பரவல் தடையை பலப்படுத்த வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது என வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி அறிவிப்பு வெளியிட்டதும் அந்த நாடுகளை மகிழ்ச்சி அடைய வைத்துள்ளது.

இந்தியாஏற்கனவேஅணுகுண்டு சோதனை நடத்தியதாலும் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கைெ யழுத்திடாததாலும் அதற்கு அணு எரிபொருள் வழங்குவதற்கு தடை உள்ளது.இந்தத் தடை விலக வேண்டும் எனில் ,45 நாடுகளை உறுப்பினராகக் கொண்ட அணு எரிபொருள்வழங்கும் நாடுகள் அமைப்பு, இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்திற்கு பச்சைக் கொடி காட்ட வேண்டும்.

அணு எரிபொருள் வழங்கும் நாடுகள் அமைப்பின் கூட்டம் கடந்த மாதம் 21மற்றும் 22ஆம்திகதிகளில் நடந்த போது இந்தியாவுக்கு சலுகை காட்டுவது தொடர்பான வரைவு அறிக்கை ஒன்றை அமெரிக்கா தாக்கல் செய்தது.

அதை பரிசீலித்த நாடு களில் 15க்கும் மேற்பட்ட நாடுகள் இந் தியாவுக்கு சலுகை காட்ட ஆட்சேபம் தெரிவித்தன .நிபந்தனைகளுடன் கூடிய புதிய வரைவு அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என தெரிவித்தன. அதனால் கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் அணு எரிபொருள் வழங்கும் நாடுகள் அமைப்பின் கூட்டம் வியாழக்கிழமை மீண்டும் வியன்னாவில் கூடியது. அப்போது இந்தியாவுக்கு சலுகை காட்டுவது தொடர்பான திருத்தப்பட்ட வரைவு அறிக்கையை அமெரிக்கா தாக்கல் செய்தது. இதை பரிசீலித்த நாடுகளில் சில புதிய வரைவு அறிக்கை கவர்ச்சிகரமானதாக இருக்கிறதே அன்றி தாங்கள் தெரிவித்த யோசனைகள் எதுவும் சேர்க்கப்படவில்லை என ஆட்சேபம் தெரிவித்தன.

இருந்தாலும் அமெரிக்கா மற்றும் இந்தியாவின் பிரதிநிதிகள் அணு எரிபொருள் வழங்கும் நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தின. இந்தியாவுக்கு சலுகை காட்ட வேண்டும் என வலியுறுத்தினார் .

இரண்டு நாட்களாக அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக இந்தியாவுக்கு சலுகை காட்டவும் இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்திற்கு பச்சைக் 'கொடி காட்டவும் அணு எரிபொருள் வழங்கும் நாடுகள் தீர்மானித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இரண்டு கட்ட பேச்சுக்கள் சுமூகமாக முடிந்த பின் தனித்தனி குழுக்களாக ஆலோசனையில் ஈடுபட்டதால் முடிவுகள் சற்று தாமதமாகும் என்று கூறப்பட்டது. அப்படி ஒப்புதல் தெரிவித்து விட்டால் 34 ஆண்டுகளுக்குப் பின் சர்வதேச நாடுகளிடம் இருந்து இந்தியாவுக்கு அணு எரிபொருள் கிடைக்கும் இல்லையெனில் இந்தியா - அமெரிக்கா இடையேயான அணுசக்தி ஒப்பந்தம் நிறைவேறுவது தடைப்படும். (ஓ)

# தாய்லாந்தின் நெருக்கடிகளை முடிவுக்கு கொண்டுவர சீர்திருத்தம்

(தாய்லாந்து)

தாய்லாந்து தற்போது எதிர்கொண்டுள்ளஅரசியல் நெருக்கடிகளுக்குமுடிவு கட்டும் வகையில் ஒரு தேசியசீர்திருத்த மொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாக அந்நாட்டு பிரதமர் சாமக் சுந்தரவேஜ் அறிவித்துள்ளார்.மேற்படி சீர்திருத்தமானது செனட் சபை யின் அங்கீகாரத்தைப் பெற்ற 30நாட்களில் நடைமுறைப்படுத்தப்படும் எனதெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க எதிர்ப்புஆர்ப்பாட்டங்கள் வன்முறையாக வெடித்ததைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பிரதமர் இராஜினாமா செய்யவேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அவர் நிராகரித்துள்ளார்.

நான் இராஜினாமா செய்யப்போவதில்லை. பாராளுமன்றத்தைக் கலைக்கவும் போவதில்லை.நான் இந்நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவுள்ளேன் எனசாமக் சுந்தரவேஜ் கூறினார். (ஓ)

# மேற்கு வன்னியில் இன்னொரு முகமாலை

வன்னி பெரு நிலப்பரப்பின் ஊடாக குடாநாட்டுக்கு தரைவழிப்பாதையை திறப்பதற்கு இராணுவத்தினர் மேற்கொண்ட பெரும் எடுப்பிலான *ஜெயசிக்குறு* நடவடிக்கை மண் கவ்விய நிலையில் தற்போது வன்னிப்பிரதேசத்தின் மேற்குக்கரையோரமாக ஏ-32 பாதைவழியாக -பூநகரி ஊடாக - குடாநாட்டுக்கு பாதை திறக்கும் ஒரு இமாலய முயற்சியில் இராணுவம் மூழ்கிப் போயுள்ளது.

தமது இந்த முயற்சிக்கு எவ்வளவு விலையும் கொடுக்க துணிந்துள்ள மஹிந்த அரசுக்கு கள நிலைமை ஒத்துழைக்கிறதா என்பதில் தான் தற்போது பாரிய சிக்கல்கள் எழுந்துள்ளன.


கிழக்கை மீட்டு விட்டதாக கூக்குரல் இட்டவாறு வடக்கில் "ஜனநாயகத்தை நாட்ட புறப்பட்ட படையினர் எத்தனையோ நடவடிக்கைகளை வன்னியில் மேற்கொண்ட போதும் அவற்றின் நிகழ்ச்சி நிரல்களை தீர்மானிப்பவர்கள் ஆரம்பம் முதலே விடுதலைப்புலிகளாகவே இருந்து வந்துள்ளனர்.

புலிகளை முடிப்பதற்கு நாள் குறித்தவர்கள், தலைவர் பிரபாகரனை பிடிப்பதற்கு நாள் குறித்தார்கள்,வன்னியை வளைத்துப் போடுவதற்கு நாள் குறித்தார்கள் .

ஆனால் இவை எல்லாமே எந்தக் கட்டத்தில் தற்போது உள்ளது என்று கடந்த முதலாம் திகதி நடைபெற்ற தாக்குதலின் பின்னர் அரசைக்கேட்டால் அதற்கான விடையும் புலிகளிடம் தான் உள்ளது.

வன்னிப் பெருநிலப்பரப்பை முற்று முழுதாக வல்வளைத்து வித்தியாசமான முற்றுகைக்குள் கொண்டுவரும் நோக்குடன் மன்னார் பகுதி ஊடாக பாரிய படை நடவடிக்கைகளை மேற்கொண்ட இராணுவத்தினர் வன்னியின் மேற்குப்பிரதேசத்தை இரண்டு துண்டுகளாக தமக்குள் பங்கு போட்டுக்கொண்டன.

**ஏ-9 பாதையை தொடாமல், வன்னியில் தொடர்ந்து ஒரு படை நடவடிக்கையை செய்து அதில் வெற்றி காண வேண்டுமானால் அதற்கு படையினரிடமுள்ள ஒரே இலக்கு பூநகரி மட்டும் தான்.**



புலிகளால் மீட்கப்பட்ட ஆயுதங்களில் ஒரு தொகுதி

இதன்படி இராணுவத்தினரின் 57ஆவது டிவிசன் அணிகள் வன்னியின் மேற்குப் பகுதியின் நடுப்பிரதேசங்களில் தாக்குதல் நடத்த, 58 ஆவது டிவிசன் படையணி வன்னியின் மேற்குகடற்கரையோரமாக பூநகரி நோக்கிய ஏ-32 நெடும்பாதையில் முன்னேறிச்சென்றது.

இந்த இரண்டு அணிகளில் 58 ஆவது டிவிசன் அணி அடம்பனில் ஆரம்பித்து கரையோரபகுதியாக விடத்தல் தீவு, இலுப்பைக் கடவை , வெள்ளாங்குளம் வரை சென்று முழங்காவில் வரை சென்றது.

அதேவேளை 57ஆவது டிவிசன் அணிகள் மேற்குப்பிரதேசத்தின் வயிற்றுப் பகுதி யில் மடு , பாலம்பிட்டி, மூன்று முறிப்பு, பெரியமடு, நட்டாங்கண்டல், கல்விளான், துணுக்காய் சென்று மல்லாவி வரை சென்று அதன் ஒரு அணி அக்கராயனிலும் போய் நின்றுகொண்டது.

இந்நிலையில் கைப்பற்றிய பிரதேசங்களை தக்க வைப்பதற்கு நாட்டின் தென்பகுதியிலிருந்து சகல படைகளையும் துடைத்து எடுத்துக்கொண்டு வந்து வன்னியின் மேற்குப் பகுதியில் தூவி விட்டுள்ள படையினர் கடந்த முதலாம் திகதி பூநகரியை கைப்பற்று வதற்காக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாச்சிக்குடாவைப்பிடிப்பதற்கு இரு பெரும் திட்டங்களுடன் ஆயத்தமாகின.

அதாவது முழங்காவில் வரை சென்று 57ஆவது டிவிசனுக்கும் துணுக்காய்ப் பகுதியை வல்வளைப்பதற்காக முன்னரே அக்கராயன் வரை சென்ற 58ஆவது டிவிசன் படை அணிக்கும் கடந்த சில வாரங்களாக வவுனியா சென்ற இராணுவத்தளபதி சரத்பொன்சேகா அளித்த விசேட திட்டமிது.

அதாவது 57, 58 ஆகிய டிவிசன் அணிகள் தாக்கவேண்டிய புலிகளின் முன்னணி காவல் அரண்கள் மேற்கில் கடற்கரையில் இருந்து நாச்சிக்குடா, முழங்காவில், நாகபடுவான், வன்னேரி, அக்கராயன் என்று ஏ-9 வீதியை நோக்கி கிழக்காக நீண்டிருந்தது.

புலிகளின் இந்த அரணை எப்படியாவது உடைப்பதன் மூலம் நாச்சிக்குடாவை கைப்பற்றுவது அல்லது நாச்சிக்குடாவை தக்க வைத்திருக்கும் புலிகளின் தொடரணியை இரண்டாக பிரிப்பது. அதனைத் தொடர்ந்து பூநகரியை தாக்கிப்பிடிப்பது என்பது தான் இராணுவத்தின் திட்டம்.

இதுவரை இதற்காக நான்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் எதுவும் பலனளிக்காத நிலையில் தற்போது தெளிவான - விரிவான- திட்டமிடலுடன் தாக்குதல் வியூகம் வகுக்கப்பட் டது.

இதற்காக 58ஆவது டிவிசனின் உயர்வலு கொண்ட கொமாண்டோ படையணிகளான சிறப்புத் தாக்குதல் அணி -1, சிறப்புத்தாக்குதல் அணி-2, ஆகியவை தாக்குதலுக்கு தயார்ப்படுத்தப்பட்டன.

கடற்கரையில் இருந்து நாகபடுவான் வரையிலான 10கிலோ மீற்றர் தூரம் கொண்ட புலிகளின் முன்னரங்கை எந்த இடத்திலாவது உடைத்து உட்புகுந்துகொள்ளும் இந்த அணிகள் அங்குள்ள புலிகளின் அணிகளை எப்படியாவது முற்றுகைக்குள் கொண்டு வந்து தாக்குவது என்றும் - அதேவேளையில் ஏனைய படையணிகள் முன்னேறி நாச்சிக்குடாவை கைப்பற்றுவது என்பதும் தான் படையினரின் முதற்கட்ட திட்டமாக இருந்தது.

இதற்காக முழங்காவில் மாதா கோவில் முன்பாகவுள்ள படையினரின் காவல் அரண்களில் இருந்து தாக்குதலை ஆரம்பிப்பது என்று வகுக்கப்பட்ட திட்டத்தின்படி நடவடிக்கை ஆரம்பமானது.

மதியம் தாண்டி பி.ப. 2 மணிக்கு ஆரம்பமானது சமர். வான் வழியாக விமானப்படையின் கிபிர் மற்றும் எம்.ஐ.-24 ஆகியவை தாக்குதல் ஆதரவை வழங்க விசேட பயிற்சி பெற்ற கொமாண்டோ தாக்குதல் அணிகள் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது சரமாரியான தாக்குதல்களை தொடங்கின.

அப்போது தான் புலிகளின் எதிர்ச்சமர் ஆரம்பித்தது. 5ஆவது தடவையும் புலிகள் தம்முடன் சரிக்கு சரி நின்று மோதமாட்டார்கள் என்று தாம் கைப்பற்றிய ஏனைய பிரதேசங்களைப்போல இந்த காவல் அரணையும் புலிகள் பின் வாங்கிச் சென்று விடுவார்கள் என்ற மன உறுதியுட னும் இராணுவம் கடும் சமர் புரிந்தனர்.

இரவில் தாக்குதலை ஆரம்பித்தால் விமானப் படையின் உதவி நேர்த்தியாக கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறைவு என்பதனால் பகலில் இந்த வலிந்த தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது.

மணிக்கணக்கில் நடைபெற்ற சண்டையில் புலிகளின் காவல் அரண்கள் இந்தா வீழ்ந்துவிடும் இந்தா வீழ்ந்துவிடும் என்ற நம்பிக்கை படையினருக்கு தொடர்ந்து இருந்து வந்தது. தாம் முன்னர் கைப்பற்றிய பிரதேச வெற்றிகள் அவர்களுக்கு இந்த நம்பிக்கையைக் கொடுத்திருந்தன. ஆனால் நேரம் செல்லச்செல்ல படையினரின் சடலங்கள் தான் கொத்துக்கொத்தாக விழ ஆரம்பித்தன.



புலிகளின் முன்னரங்கு

புலிகளின் சரமாரியான எதிர்த்தாக்குதல் படையினரை நிலைகுலைய வைத்தது. ஒரு கட்டத்திற்கு மேல் தமது திட்டத்தை கைவிட தீர்மானித்த படையினர் தமது சகாக்களின் சடலங்கள் புலிகளின் கைகளில் வீழ்ந்துவிடக் கூடாது என்று முடிவெடுத்தனர்.

58ஆவது டிவிசன் படையணி தளபதி பிரிகேடியர் சவீந்திர டி சில்வாவின் நெறிப்படுத்தலுக்கு அமைய கள முனை தளபதிகள் தமது படையினரின் சடலங்கள் எக்காரணம் கொண்டும் புலிகளின் கைகளில் சிக்கி விடக்கூடாது என்று உத்தரவிட்டனர்.

**யுத்த காலத்தில் டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளாக இவ்வளவு காலமும் பயன் படுத்தப்பட்டு வந்த "லோவுக்கு " மேலதிகமாக கடந்த முதலாம் திகதி சமரில் முதன்முறையாக "பக்தார் ஷிக்ஹான் " எனப்படும் பாகிஸ்தான் தயாரிப்பிலான புதிய ரக டாங்கி ஏவுகணை படையினரால் பயன்படுத்தப்பட்டது.**

அன்று இரவு முழுவதும் படையினரின் சடலங்களை எப்படியாவது தமது பகுதிக்குள் எடுத்துவிட வேண்டும் என்ற நோக்கில் படையினர் கடுமையாக போராடினர். இயலுமான வரையில் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு அதிகாலை இரண்டு மணியளவில் பெரும் இழப்புகளுடன் தாக்குதலை நிறுத்திக் கொண்டனர் படையினர்.

தாக்குதல் தொடர்பாக பேசவல்ல ஒருவர் தெரிவிக்கையில்,

"சடலங்களை தூர இருந்த முட்கம்பிகளைப்போட்டு இழுத்தாவது தமது பகுதிக்குள் எடுத்துவிட வேண்டும் என்ற ஓர்மத்துடன் படைகளின் கடைசி மணி நேர சண்டை நடைபெற்றது" என்றார். புலிகள் மேற்கொண்ட முறியடிப்பு தாக்குதலில் 40க்கும் மேற்பட்ட படையினர் கொல் லப்பட்டனர். 50க்கும் மேற்பட்ட படையினர் காய மடைந்தனர். படையினரின் 7 சடலங்களும் பெருந்தொகையான ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இந்த தாக்குதல் படுதோல்வியடைந்ததை தொடர்ந்து முன்னரே ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்த அடுத்த திட்டத்தை செயற்படுத்த இராணுவ தலைமைப்பீடத்தில் இருந்து உடனடியாக கட்டளை பறந்தது.

ஏலவே அக்கராயன் பிரதேசத்தில் நிலைகொண்டிருந்த 58ஆவது டிவிசன் படையணி புலிகளின் அடுத்த தொடர் முன்னணி காவல் அரணை தாக்கி உள் நுழைவதற்கு ஆயத்தமானது.

முன்னாள் இராணுவத்தளபதி ஜானக பெரேராவின் விசுவாசியான இந்த டிவிசன் தளபதி ஜகத் டயசுக்கும் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கும் இடையில் ஒரு வித முறுகல் நிலை இருந்து வருகின்ற போதும், துணுக்காய், மல்லாவி எனப்படைத்தரப்பால் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக கருதப்படும் பிரதேசங்களை கைப்பற்றியதால் இவை தலைமையிலான படையணி மீது படைத் தலைமைக்கு எப்போதும் எதையும் சாதிக்கும் என்ற நம்பிக்கை அண்மைக்காலமாக நிறையவே இருந்தது.

இந்த படையணியின் முக்கிய கொமாண்டோ அணிகள் அடுத்த தாக்குதலுக்கு தயாராகின. வன்னேரிக்கும் அக்கராயனுக்கும் இடையிலான சுமார் 4 மைல்கள் நீளமான புலிகளின் முன்னணி அரணை உடைத்து புலிகளை முற்றுகைக்குள் கொண்டுவரும் திட்டத்துடன் அதிகாலை 5 மணிக்கு சமர் ஆரம்பமானது.

இந்த தாக்குதலில் எப்படியாவது வெற்றி அடைவது என்ற திட்டத்துடன் படையினரின் அணிகள் கடும் சமரை ஆரம்பித்தன. ஆர்.பி. ஜி., லோ உட்பட கனரக ஆயுதங்கள் சகிதம் முன் னேறிய படையினரின் இந்த தாக்குதலில் ஒரு விடயத்தை முக்கியமாக குறிப்பிட வேண் டும்.

அதாவது யுத்தகளத்தில் டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளாக இவ்வளவு காலமும் பயன் படுத்தப்பட்டுவந்த "லோவுக்கு " மேலதிகமாக இந்த சமரில் முதன் முறையாக "பக்தா ஷிக்ஹான் " எனப்படும் பாகிஸ்தான் தயாரிப்பிலான புதிய ரக டாங்கி எதிர்ப்பு ஏவுகணை இந்த சமரில் படையினரால் முதல் முறையாக வலிந்த தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டது.

எதிரி மீதான தாக்குதலுக்கு இலக்கை வகுத்து அதனை தாக்குபவரின் திறன் மூலம் செயற்படுத்தும் வகையில் வடிவ மைக் கப்பட்ட டாங்கி எதிர்ப்பு ஏவுகணையே இதுவரை காலமும் இராணுவத்தினர் பயன்படுத்தி வந்தனர்.

"லோ" எனப்படும் இலகு ரக டாங்கி எதிர்ப்பு ஏவுகணை உட்பட மூன்றாவது தலைமுறை ஆயுதங்கள சகலதும இந்தப்பட்டியலில் அடங்கும்.

ஆனால் இந்த ஆண்டின் முற்பகுதியில் பாகிஸ்தானிடமிருந்து கொள்வனவு செய்த "பக்தார் ஷிக்ஹான்" எனப்படும் இந்த புதிய ரக டாங்கி எதிர்ப்பு ஏவுகணைக்கு இலக்கிற் கான கட்டளைகளை இலத்திரனியல் முறை மூலம் வழங்கி விட்டு இயக்கினால் அது தவ றாமல் எதிரியின் இலக்கை தாக்கி துவம்சம் செய்யக்கூடியது. இதற்கு தாக்குபவரின் திறன் அவசியமற்றது.

இந்த ஏவுகணை பாரிய பதுங்கு குழிகள் மற்றும் வலிமையான காவல் அரண்கள் ஆகியவற்றை இலக்குப்பிசகாது அழித்து ஒழிக்கக் கூடியது. தோளில் வைத்து தாக்கக்கூடிய வசதி கொண்ட இந்த ஏவுகணை , உலங்கு வானூர்தியில் பொருத்தி தாக்குவதற்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணையை கடந்த ஏப்ரல் மாதம் இராணுவம் மன்னார் பகுதியில் முதன் முறையாக பரிசோதித்திருந்தது.

**யாழவன்**

(10ஆம் பக்கம் பார்க்க)

## பதவியுயர்வு வழங்கப்படாதது குறித்து பொலிஸார் விசனம்

(கொழும்பு)

வெள்ளவத்தை ரெயில் குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான விடுதலைப்புலி சந்தேக நபரைக் கைது செய்த ஈரப் பெரியகுளம் சோதனைச் சாவடியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இதுவரையில் எவ்வித பதவி உயர்வுகளும் வழங்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் பல்வேறு முக்கிய தகவல்கள் வெளியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் குறித்த சந்தேக நபரைக் கைது செய்த பொலிஸ் காவலரணின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட உத்தியோகத்தர்களுக்கு இதுவரையில் எவ்வித பணப்பரிசில்களோ பதவி உயர்வோ வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை குறித்த சந்தேக நபர்களைக் கைது செய்ய உதவிய பெண் ஊர்காவற்படை வீரருக்கு மாத்திரம் பதவி உயர்வும் பணப் பரிசிலும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்களின் மூலம் பொலிஸ்திணைக்கள உத்தியோகத்தர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாக நேரிடும் எனக் குறிப்பிடப்படுகிறது. (ஓ)

## க.பொ.த உ/தரப்பரீட்சை முடிவுகளின் தாமதத்தால் வெளிநாட்டு பல்கலை விண்ணப்பதாரிகள் பாதிப்பு

(கொழும்பு)

உயர் தரப்பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கை தாமதமடைவதால் இவ்வருடத்தில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்க உள்ள பல மாணவர்களுக்கு அதற்கான வாய்ப்பு இல்லாமல் போகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடக் கூடிய வகையிலேயே கல்விப் பொது. த (உ/த) பரீட்சையின் கால அட்டவணை தயாரிக்கப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவிக்கின்றார்.

எனினும் இம்முறை ஆசிரியர் சங்கங்கள் சிலவற்றின் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக உயர் தரப்பரீட்சையின் விடைத் தாள்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதோடு இதன் மூன்றாம் கட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 3ஆம் காட்ட நடவடிக்கைகளிலும் பங்கு பற்றுவது குறித்து ஆசிரியர் சங்கங்கள் இதுவரை இணக்கம் தெரிவிக்கவில்லை. ஒக்ஸ்போர்ட் கேம்பிறிஜ் உள்ளிட்ட பிரதான வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் 35ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## அரச செலவீனங்கள் அனைத்திலும் 30 வீத மோசடி இடம்பெறுகின்றது

### வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து அரச செலவினங்களிலும் 30 வீத மோசடி இடம்பெறுவதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரச செலவீனங்களில் இடம்பெறும் மோசடி என்பது மக்களின் சொத்துக்களையும் வருமானத்தையும் அபகரிக்கும் செயல் என குறிப்பிட்ட வாசுதேவ நாணயக்கார இத்தகைய செயல்களினால் மக்கள் தமக்கு கிடைக்க வேண்டிய சேவைகளையும் இழப்பதாக கூறினார்.

மோசடிகளை குறைப்பதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அரச துறையில் இடம்பெறும் மோசடிகளை ஆராயும் பொருட்டு நியமிக்கப்பட்ட பொது முயற்சியான்மை நிலையியற் குழுவினரால் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்தில் தெரிவிக்க பட்டபோதும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றமும் அமைச்சர்களும் இது தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதன் மூலம் மாத்திரமே அரச துறையில் இடம்பெறும் மோசடிகளை கட்டுப்படுத்த முடியும் எனவும் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-6)

## இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான வீதி வலையமைப்பை ஏற்படுத்த முயற்சி

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வீதி வலயமைப்பு ஒன்றினை ஆரம்பிப்பதற்கு இலங்கை எதிர்பார்ப்பதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அமால் குமாரகே தெரிவித்துள்ளார்.

15ஆவது சார்க் மாநாட்டில் போக்குவரத்தினூடாக பிராந்திய நாடுகளுக்கிடையில் உறவுகளை வலுப்படுத்தல் என்னும் தீர்மானத்திற்கமைய இந்த வருட இறுதியில் நடைபெறவுள்ள பிராந்திய போக்குவரத்து அமைச்சர்களின் மாநாட்டில் இந்தியாவிடமே இது தொடர்பான திட்டவரைபினை இலங்கை கையளிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையில் படகுசேவையினை ஆரம்பிப்பது குறித்து இலங்கை ஏற்கனவே முயற்சி செய்துகொண்டிருக்கிறது. இது குறித்தும் இரு நாடுகளினதும் அமைச்சர்கள் சந்தித்து பேசுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இரு நாடுகளுக்குமிடையிலான போக்குவரத்து செலவினம் கூடுதலாக இருப்பதாகவும் 13-14 வீதம் கூடுதலாக வரிகளுக்கு செலவாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிராந்தியத்தில் உள்ள சில அபிவிருத்தி அடைந்த நாடுகள் ஏனைய நாடுகளுடன் போக்குவரத்து ரீதியாக தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் அர்த்தபூர்வமான அபிவிருத்தியை அடைய முடியும் என பிராந்திய போக்குவரத்து தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகள் தெளிவுபடுத்தியிருப்பதாகவும் பேராசிரியர் குமாரகே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வருடாந்தம் கப்பல் போக்குவரத்துக்காக 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படுகின்றன.

இதில் மூன்றில் ஒரு பங்கு தேவையற்ற செலவீனம் என்று பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

விமான சேவைகள் துறையில் 8 பில்லியன் அமெரிக்க டொலர் உள்ளீடாக செலவிடப் படுவதாகவும் இதில் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர் வீணாக செலவாவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ)



பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய மாணவர்களுக்கு பசுப்பால் வழங்கும் நிகழ்வை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா ஆரம்பித்து வைப்பதையும் பருத்தித்துறை கால் நடை வைத்திய அதிகாரி சி.வசீகரன், வித்தியாலய அதிபர் அ.சா. அரியகுமார் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## பாட நூல் தயாரிப்பதற்கான எழுத்தாளர் குழுவை நியமிப்பதற்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

பாடசாலைகளில் 2010 ஆம் ஆண்டு 9ஆம் தரத்திற்கு அவசியமான பாடநூல்களை உரிய முறையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலமாக தயாரிப்பதற்கான எழுத்தாளர் குழுவை நியமனம் செய்வதற்கு தலைமையுடயவர்களிடமிருந்து கல்வி வெளியீட்டுத் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இதற்கமைய 16 பாட நூல்களை மூன்று மொழிகளிலும் ஆக்குவதற்கான நடவடிக்கைகளை கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

சகல நூல்கள் தொடர்பாகவும் நியமிக்கப்படவுள்ள எழுத்தாளர் குழு 15 பேரைக் கொண்டதாக அமையுமெனவும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பாண்டித்தியமுள்ள அங்கத்தவர்களும் அக்குழுவிற்கு தெரிவு செய்யப்படவிருப்பதுடன் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான நூல்களை சிங்கள மொழி மூல நூல்க்ளுக்கு சமாந்தரமாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் டப்ளியூ .எம்.என். ஜே.புஸ்பகுமார குறிப்பிட்டுள்ளார்.

விண்ணப்பதாரிகள், பட்டதாரிகளாக இருப்பதுடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா அல்லது விண்ணப்பிக்கும் விடயத்துடன் தொடர்பான வேறு டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் அவசியமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு பயிற்றப்பட்ட ஆசிரியராயின் பயிற்சியின் பின் 10 வருட சேவையை பூர்த்தி செய்திருப்பதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலத்தில் பாடத்தை ஆக்கும் நிபுணத்துவம் அனுபவம் என்பனவும் இருத்தல் அவசியமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவற்றுடன் பாடநூல் எழுதுதல் பதிப்பித்தல் சித்திரங்கள் மற்றும் வரைபடங்களை வடிவமைத்தலில் பெற்றிருக்கும் பயிற்சிகள் அனுபவங்கள் மேலதிக தகைமையாகக்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கல்வி வெளியீட்டுத் திணைக் களத்தின் ஆக்கக்குழு நியமன விதிகளிற் கமைவாக எழுத்தாக்கக் குழுக்கள் நியமனம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள தோடு திணைக்களம் வெளியிட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக விண்ணப்பங்களை தயாரித்துப் பூரணப்படுத்தி இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுறுபாய, பத்தர முல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டுமென திணைக்களம் அறிவித்துள்ளது. (ஓ)

## தமிழர்களுக்கு எதிரான அடக்கு முறைகளை நியாயப்படுத்தும் முயற்சியில் ஹெகலிய ரம்புக்வெல

(கொழும்பு)

தமிழர் இன ரீதியாக ஒடுக்கப்படுவதனை நியாயப்படுத்தும் முயற்சிகளைஅரசாங்கப் பாதுகாப்பு பேச்சாளர் ஹெகலிய ரம்புக் வெல மேற்கொண்டுவருவதாக நாழிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காகவே தமிழர்கள் மீது அதிக பட்சக் கெடுபிடிகள் மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் ஹெகலிய அண்மையில் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் தமிழர்கள் மீதான இன ஒடுக்கு முறையை அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரியும் சிரேஷ்ட அமைச்சருமான கெஹலிய ஏற்றுக் கொண்டுள்ளார்.

தமிழ் மக்களுக்கு மத்தியில் மறைந்திருந்த பிரிவினரே பல்லின மக்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்களை மேற் கொள்ளவதாக அவர்குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தமிழர்கள் அதிகமான நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்ட போதிலும் அண்மைக் காலமாக தமிழர்களைப் போன்ற பல சிங்களவிடுதலைப்புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

100க்கும் மேற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பயிற்சி பெற்ற சிங்கள உறுப்பிணர்கள் இது வரையில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான ஓர் சூழ் நிலையில் தனித்து ஓர் இனத்தின் மீது மாத்திரம் பாதுகாப்புக் கெடுபிடிகளைக் கட்டவிழ்த்துவிடுவது மனித உரிமை மீறலாகவே கருதப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. அடிப்படை உரிமை மற்றும் பாதுகாப்புக் காரணிகளின் போது தமிழர் களின் உரிமைகளைக் கொழும்பு அரசாங்கம் நசுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உரிமைக்காகப்போராடும் அனைத்துத் தமிழர்களும் பயங்கரவாதிகள் எனத் தெற்கின் சிங்களப் பௌத்த அரசியல் தலைமைகள் முத்திரை குத்தி விடுவதாகமேலும் குறிப்பிடப்படுகிறது.

தெரிந்தோ தெரியாமலோஅமைச்சர் ஹெகலிய தமிழ் மக்கள்மீதான அடக்கு முறைகளை பாதுகாப்பை முன்னிலைப் படுத்தி நியாயப் படுத்தியுள்ளார்எனக் குறித்த நாளிதழ் செய்திவெளியிட்டுள்ளது. (ஓ)

எத்தனையோ அநீதிகள் -பழக்கத்தால் நீதிகளாக தோன்றுகின்றன.
—ஆப்கானிஸ்தான்

வலம்புரி

## உயர் நீதிமன்றுடன் மோதும் பௌத்த பிக்குகள்

இலங்கையில் பௌத்த பிக்குகள் சச்சரவு செய்யாத இடமே இல்லை எனலாம். அரசியல் முதல் நீதி பரிபாலனம் வரை அவர்களின் ஆதிக்கம் பரந்து விரிந்து செல்கின்றது.

நாட்டின் ஜனாதிபதி முதல் சாதாரண பிரஜைகள் வரை தம்மை வீழ்ந்து வணங்கவேண்டுமென எதிர்பார்க்கும் புத்த பிக்குகள் சட்டத்தின் முன் தாமும் சாதாரண பிரஜைகள் என்பதை மறந்து நீதிக்கு முன்னாலும் தாமே அதிகௌரவத்தினர் எனக் கருதுகின்றனர். இதனை நேற்று முன்தினம் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நடந்த சம்பவம் உறுதி செய்துள்ளது.

சட்டத்தை மீறி ஒலிபெருக்கியை பயன்படுத்தி சமய நிகழ்ச்சியை நடத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பௌத்த பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டு உயர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

நீதிமன்ற சம்பிரதாயப்படி நீதிபதிகள் மன்றுக்கு வருகை தரும்போது சபையில் இருப்பவர்கள் எழுந்து நின்று மரியாதை செய்வது மரபு ஆகும்.

எனினும் பிரதம நீதியரசர் உள்ளிட்ட மூன்று நீதிபதிகள் மன்றிக்கு வந்தபோது சபையில் இருந்த எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த சம்பந்தப்பட்ட புத்த பிக்கு மட்டும் தனது இருக்கையிலேயே இருந்து கொண்டார்.

இதனை அவதானித்த பிரதம நீதியரசர், நீதிமன்றுக்கு மரியாதை செலுத்துமாறு சட்டத்தரணி மூலமாக பிக்குவுக்கு தெரியப்படுத்தினார். இருந்தும் குறித்த பிக்கு ஆசனத்தை விட்டு எழுந்து நிற்கவில்லை. இந்நிலையில் அவரின் பிணை மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

இந்நிகழ்வையடுத்து பௌத்த பிக்குகள் குழம்பிப் போயுள்ளனர். அதாவது ஜனாதிபதியாக இருந்தாலும் தமக்கு மரியாதை செலுத்துவேண்டுமே தவிர தாம் மரியாதை செலுத்துவது வழக்கமல்ல.

மன்னர் ஆட்சியிலும் கூட இதுவே நியதி என பௌத்த பிக்குகள் வாதிடுகின்றனர். ஆக பௌத்த பிக்குகளின் மேற்போன்ற வாதத்திலிருந்து நீதிமன்றமும், சட்டவாக்கமும் பௌத்த பிக்குகளுக்கு கட்டுப்பட்டது என்ற முடிபுக்கு நாம் வரமுடியும்.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற கருத்து நிலை இருக்கும் வரை இத்தகைய முரண்பாடுகள் இருக்கவே செய்யும் என்பது மறுக்க முடியாத உண்மை. அதனையே நீதி பரிபாலனத்துடன் முறுகிக் கொள்ளும் பௌத்த பிக்குகளின் நடவடிக்கைகள் கோடி காட்டுகின்றன.

உயர் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை எதிர்த்து கருத்துத் தெரிவிப்பதே சட்டத்திற்கு முரணானதாகும். அப்படியிருந்தும் பௌத்த பிக்குகள் துணிந்து நின்று நீதிமன்றத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கின்றனர். -எதிர்க்கின்றனர். எனில் அதற்கு அடிப்படைக் காரணம் இலங்கையின் ஆட்சி முறைமையும், அரசியல் அமைப்பின் குறைபாடுகளுமே ஆகும்.

நீதிபதிகள் நீதிமன்றத்துக்கு வருகை தரும் போது பௌத்த பிக்குகள் எழுந்து நிற்பது பௌத்த சாசன மரபுக்கு ஒவ்வாதது எனக் கூறுவதிலிருந்து எதிர்காலங்களில் பௌத்த பிக்குகள் யாருக்குமே எழுந்து மரியாதை செலுத்தத் தேவையில்லை என்றும் அது தொடர்பில் பிக்குகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்றும் சட்டம் இயற்றப்படும்.

இந்த நம்பிக்கையிலேயே புத்த பிக்குகள் நீதி பரிபாலனத்தை எதிர்த்து கோஷமிடுகின்றனர்.

அவர்களின் கோஷத்தில் அரசு ஆடிப்போகும் என்பது தெரிந்த உண்மை. இங்குதான் ஒரு அடிப்படை பிரச்சினை எழுகின்றது.

அதாவது பௌத்த பிக்குகள், எவருக்குமே எழுந்து நின்று மரியாதை செலுத்தத் தேவையில்லை எனில் இந்து, கிறிஸ்தவ மதகுருமாரின் நிலை என்ன? அவர்கள் எழுந்து நிற்கவேண்டுமா? அல்லது பௌத்த பிக்குகளுக்குள்ள மகா மரியாதை அவர்களுக்கும் உண்டா? இந்தக் கேள்விகளுக்கான சரியான பதிலும் இலங்கையின் எதிர்கால ஒற்றுமைக்கு பங்காற்றும்.

## தமிழர்கள் தன்மானத்தை நிரூபித்துள்ளனர் என்கிறார் விக்கிரமபாகு கருணாரத்ன

(கொழும்பு)

யுத்தத்தை திணித்திருக்கின்ற கூட்டமைப்பு அரசாங்கத்தின் நிவாரணங்களையும் உணவுப் பொதிகளையும் வன்னித் தமிழர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை.

சொந்தமண்ணில் வாழவிடு இல்லாது போனால் அந்த மண்ணிலேயே சாகவிடு என்ற தன்மானத்தைக் காத்துக் கொள்ளவே இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை அந்த மக்கள் நிராகரித்திருப்பதாக இடது சாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

அகதிகளாகியும் அடம்பிடிப்பதாக அரசாங்கம் கூறினாலும் சர்வதேசமே அலுத்துக்கொண்டாலும் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் மக்களின் நிலைப்பாட்டை மாற்றிவிட முடியாது என்றும் அவர் கூறினார். யுத்த சூழ்நிலை வன்னித்தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கேட்டபோதே கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் யுத்தத்தை வலிந்து நடத்திக்கொண்டிருக்கின்றன. இதனால் இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

இன்றைய நிலையில் அம்மக்கள் வாழவே வழியற்றுக் கிடக்கின்றனர். பட்டினியால் செத்து மடிகின்றனர். இவர்களுக்காக அரசாங்கமும் ஐக்கிய நாடுகள் அமைப்பும் இணைந்து நிவாரணங்களை ஒழுங்கு செய்திருக்கின்றமையும் தெரிந்த விடயம்.

ஆனால் அகதிகளாக்கப்பட்டுள்ள இரண்டு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான வன்னித் தமிழர்கள் எவரும் இந்த நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளவரவில்லை. அது பற்றி அவர்கள் யோசிக்கவும் இல்லை என்பதே இப்போது தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

யுத்தத்தை திணித்து அப்பாவிகளைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கும் இனவாதப் போக்குடைய அரசாங்கத்தின் நிவாரணங்களையும் உணவுப் பொதிகளையும் ஏற்றுக் கொள்ள அவர்களுக்கு இஷ்டமில்லை.

அகதிகளாக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரும் தமது மண்ணை நேசிக்கின்றனர் என்பது அரசாங்கத்தினதும் சர்வதேசத்தினதும் அழைப்பினை நிராகரித்திருப்பதில் இருந்து தெரிகின்றது.

வாழவே வழியில்லாத போதிலும் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்கு ஏன் அந்த மக்கள் வரமறுக்கின்றனர் என்ற கேள்வி அரசாங்கத்திற்கு இப்போது எழுந்துள்ளது. இப்போது வடக்கில் இடம் பெற்றுக்கொண்டிருப்பது புலிகளின் பிரச்சினை அல்ல தாயகப் பிரச்சினையே மேலோங்கியுள்ளது.

எமது பூமியை தந்துவிடு சுதந்திரமாக வாழவிடு இல்லையேல் சொந்த மண்ணிலேயே சாகவிடு என்ற நிலைப் பாட்டில் அவர்கள் உறுதியாக இருக்கின்றனர்.

தமது தாயகப் பூமியை காத்துக்கொள்ளவும் சுய நிர்ணய உரிமையை தாமே அமைத்துக்கொள்ளவும் வெளிநாடுகளில் தங்கியிருக்கின்ற அனைத்து தமிழர்களும் வன்னியில் கூடினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை இது நடைபெறப்போவது உறுதியாகியுள்ளது என்றார். ஓ

## இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஏற்றுக்கொண்டார்

(கொழும்பு)

இலங்கையில் எந்தச் சூழ்நிலையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகிறது என்பதை சர்வதேச சமூகம் நன்கு புரிந்து கொள்ளவேண்டும் என சர்வதேச முதலீட்டு அபிவிருத்தி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.



குண்டுவெடிப்புக்கள் போன்ற வன்முறைச் சம்பவங்களிலிருந்து நாட்டு மக்களைக் காப்பாற்றவேண்டியநிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருப்பதாக அவர் கூறினார். விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் இராணுவ நடவடிக் கைகளால் மனித உரிமை மீறல்கள் அதிகரித்திருப்பதாக சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கம் மீது குற்றஞ் சாட்டியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக பி.பி.சி. செய்திச்சேவைக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் ஏற்றுமதி வரிச்சலுக்கையை (ஜீ.எஸ்.பி.பிளஸ்) மீளப்பெற்றுக் கொள்வதற்கான தகுதியை இழந்துவிடும் என அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழு எச்சரித்திருந்தது.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக நாங்கள் எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருந்தோம் ஐக்கிய நாடுகள் அறிக்கைகள் உட்பட பல அறிக்கைகளில் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தன என ஐரோப்பிய ஆணைக்குழுவின் வெளிவிவகார பிரதிப் பணிப்பாளர் ஜோஆஓ மச்சடோ கடந்த ஜுன் மாதம் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

எனினும் இலங்கையில் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. எனக் குறிப்பிட்டிருக்கும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஏற்றுமதி வரிச்சலுகையை நீடிப்பது தொடர்பான விண்ணப்பத்தை அரசாங்கம் ஒக்டோபர் 31ஆம் திகதி சமர்ப்பிக்கும் எனக் கூறியுள்ளார். இந்த விடயம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை எதிர் வரும் டிசம்பர் 15ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியம் வெளியிடும். ஓ

## புலி உறுப்பினருக்கு உதவியதால் காவல் துறை அதிகாரி பதவி நீக்கம்

தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரை வானூர்தி நிலையித்தில் இருந்து தப்பிச் செல்வதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்திய காவல் துறை அதிகாரி ஒருவர் பதவி விலக்கப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கத்தின் உறுப்பினர் என்று இந்திய அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த ஒருவர் தொடர்பிலேயே இவர் பதவி விலக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். ஓ

## திருத்துதலும் -திருந்துதலும்



தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். குற்றம் புரிந்தவர்கள் துன்பப்படவேண்டும் என்பது மனிதர்களின் எண்ணம். அதற்காக பல சட்டங்கள் விதிமுறைகள் நீதிமன்றங்கள் கட்டப் பஞ்சாயத்துக்கள். இன்று இவ்வகளையும் மீறி குற்றம் செய்தவன் அங்கேயே அப்போதே, மக்களாலேயே தண்டிக்கப்படுகின்ற நிலையும் வந்து விட்டது.

ஆனால் இறைவனின் திட்டத்தில்தவறு செய்தவர்கள் திருத்தப்பட வேண்டும் ஏன்... திருந்துவதற்கு வாய்ப்புக்கள் தரப்படவேண்டும் இந்த திருத்தம் அதிகாரத்தினால் அல்ல மாறாக அன்பினால் செயல்பட வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம்.

### பரமபிதா காட்டிய பாதை

இன்றைய நற்செய்தியும் இதைத்தான் ஆழமாக அழுத்தமாக வலியுறுத்துகிறது. "உங்கள் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் உங்களுக்கு எதிராக பாவம் செய்தால் நீங்களும் அவரும் தனித்திருக்கும் போது அவரது குற்றத்தை எடுத்துக் காட்டுங்கள் அவர் உங்களுக்கு செவி சாய்த்தால் நல்லது"

இங்கேயும் இயேசு திருத்துவதின் படி நிலையை விளக்குகின்றார். முதலில் குற்றம் செய்தவரை தனியே அழைத்து அவருக்கு அறிவுரை சொல்ல வேண்டும் அதற்கு செவிசாய்க்கா விட்டால் இரண்டு மூன்று பேர் சேர்ந்து திருத்த வேண்டும். அதற்கும் செவிசாய்க்காவிட்டால் உயர் அதிகாரிகளிடம் சொல்லித்திருத்த வேண்டும் என்கிறார். கடைசி வாய்ப்பு வரை அவரைத் திருத்த வேண்டும் என்கிறார்.

அடுத்துஒருவரை எப்படி திருத்த முடியும் என்றும் இயேசு கூறுகிறார் ஒரு முறை அவருடைய குற்றத்தை உணரச் செய்வதே பார மான சிலுவை. அடுத்து அவரை திருத்துவது என்பது இமாலய கடினம். ஆனால் கல் மனதையும் கரைய வைக்க முடியும் எப்படி? செபத்தினால், அன்பினால்.

ஒன்று கூடி குற்றம் புரிந்த தவறு செய்த அந்த மனிதருக்காக செபிக்கின்ற போது அம்மனிதர் திருத்துவதற்குவாய்ப்புண்டு. கூடுமானால் அம்மனிதரையும் சேர்த்து செபித்தால் இன்னும் பலன் அதிகமாகும். அன்பினால், செபத்தினால் இயலாதது ஒன்றுமில்லை. அடுத்து தவறு செய்தவரும் திருந்த வேண்டும் இல்லையென்றால் அவன் சபிக்கப்பட்டவன் என்று இயேசு கூறுகிறார்.

இன்று பல மனித உள்ளங்கள் தவறுகளைத் திருத்தியும் திருந்தியும வாழத்துடிக்கின்றார்கள். நாம் அவர்களை ஏற்றுக் கொள்ளத் தயாரா? தவறு செய்வது மனித இயல்பு. ஆனால் தவறைத் திருத்தி வாழ்வது புனிதப் பண்பு. அந்த தவறையே மன்னிப்பது இறைபண்பு. ஒரு புனிதனே ஒரு நாளைக்கு 7முறை தவறு செய்கிறான். நாம் எம் மாத்திரம்? எனவே அன்புடன் திருத்துவோம் பண்புடன் திருந்துவோம்.

ஜோன் ரேபேர்ட்

# இருபத்தொராவது ஆண்டிலும் கருத்தொருமைப்பாடு எட்டப்படாத 13ஆவது திருத்தச்சட்ட மூலம்

1987ஆம் ஆண்டு இலங்கை -இந்திய ஒப்பந்தத்திற்கு அமைய இந்தியாவால் முன்வைக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை மீண்டும் தூசி தட்டி இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைப்பதற்கான முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் இதயம் என கருதப்படும் இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரித்துள்ள நிலையிலேயே இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான இறுதித் தீர்வை முன்வைக்கவென இந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட அனைத்துக்கட்சி குழு தனது பரிந்துரைகளை 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அடிப்படையாகக்கொண்டே முன்வைத்துள்ளது. இதன் பின்னர் 13ஆவது திருத்தச்சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கை வந்திருந்த இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கிடம் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்திருந்ததாகவும் பதிலுக்கு அது ஒரு தற்காலிக ஏற்பாடே தவிர 13ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கும் மேலதிகமான தீர்வு ஒன்று இறுதித்தீர்வாக முன்வைக்கப்பட வேண்டியது அவசியம் என இந்தியப்பிரதமர் வலியுறுத்தியிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இவற்றைப் பார்த்தால் தனித்தனியே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கே என்றாலும் பொலிஸ், காணி அதிகாரங்களுடன் கூடிய முழுமையான அதிகாரங்கள் வழங்கப்படும் என்றும் இதற்கு மேலதிகமாக இந்தியாவின் புண்ணியத்தில் கூடுதல் அதிகாரங்களுடன் கிட்டலாம் என்றும் எதிர்பார்ப்புகள் தோன்றும்.

ஆனால் இரு நாட்டு தலைவர்களின் உறுதிமொழிகள், வாக்குறுதிகள் நிறைவேற்றுவதற்கு சாதகமான சூழல் இலங்கையில் காணப்படுகிறதா என்பதுதான் இங்கிருக்கும் சந்தேகம்.

இந்தியப்பிரதமருக்கு வழங்கிய உறுதிமொழிக்கமைய மஹிந்த ராஜபக்ஷ 13ஆவது திருத்தச்சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்த முன்வந்தாலும் பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் போன்றவர்கள் அடிக்கடி கூறி வரும் தென்னிலங்கை கட்சிகளுக்கிடையில் கருத்தொருமைப்பாடு என்பது இந்த விடயத்தில் எட்டப்பட்டுள்ளதா என்ற கேள்வி எழுகிறது. அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் கட்சிகளுக்கிடையே கூட இந்த விடயத்தில் இன்னமும் கருத்தொருமைப்பாடு ஏற்படவில்லை என்பதை அக்கட்சிகளின் செல்வாக்கு மிக்க முக்கிய பிரமுகர்கள் வெளியிடும் கருத்துக்களின் மூலம் கண்டுகொள்ள முடிகிறது.

ஒரு பக்கம் அனைத்துக்கட்சிக்குழுவுக்கு மேலதிகமாக 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கான அமைப்பொன்று அரசாங்க அமைச்சர்களின் அங்கத்துவத்துடன் உருவாக்கப்பட்டு அதற்கு சாதகமான சூழல் உருவாக்கப்பட்டு வந்தாலும் அரசாங்கத்தின் மிக உயர் மட்ட செல்வாக்குடைய சில கட்சிகளும் ஜனாதிபதி மஹிந்தவுக்கு மிகவும் நெருக்கமானவர்களாக, குறிப்பாக அவரது கொள்கை உருவாக்கங்களில்பிரதான பங்கெடுப்பவர்களாக வர்ணிக்கப்படும் இத்தகைய கட்சிகளின் முக்கிய பிரமுகர்களும் வெளியிட்டு வரும் கருத்துக்கள் இந்த முயற்சிகளை யெல்லாம் கேள்விக்கு உள்ளாக்குவனாகவே உள்ளன.

சிங்கள தீவிரவாத போக்குடையவர்களின் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைப் போக்கும் பரிவு மனப்பான்மை, புரிந்துணர்வு, பகிர்ந்தளிக்கும் ஆற்றல் என்பவற்றில் உள்ள குறைபாடுகளுமே இலங்கையின் உள்நாட்டு மோதல் இவ்வளவு தீவிரமடைவதற்கு காரணமாக அமைந்துள்ளது என அரசாங்கத்தின் அமைச்சரும் 13ஆவது திருத்தச்சட்ட மூலத்திற்கு ஆதரவாக உருவாக்கப்பட்டுள்ள அமைப்பின் உறுப்பினருமான ராஜித சேனாரத்தின அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் கூறியுள்ளார்.

இவர் முன்னர் விடுதலைப்புலிகளுடன் போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டு அவர்களுடன் 6 சுற்றுப்பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கத்தில் முக்கிய அமைச்சுப்பதவியில் இருந்ததுடன் சமாதான முயற்சிக்கு ஆதரவான கருத்துக்களையும் வெளியிட்டு வந்தவர். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானபின்னர் அரசாங்கத்தில் இணைந்து கொண்ட 17ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களில் இவரும் ஒருவர்.

இலங்கையில் நிலவும் பிரச்சினை பற்றி மேலும் அவர் அந்த செவ்வியில் குறிப்பிடும் போது,

பிரச்சினைக்கான உண்மையான மூல காரணியை கண்டறிந்து அதற்கே தீர்வினைக் காண முற்பட வேண்டும். தமிழ் மக்கள் மீதான அடக்கு முறையே இனப்பிரச்சினைக்கான உண்மையான மூலகாரணி. ஆனால் இந்தக் காரணியை கண்டறிவதில் 1956முதல் ஆட்சியில் இருந்து வந்த தெற்கின் தலைமைகள் மீண்டும் மீண்டும் தோல்வியையே சந்தித்து வந்துள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

இந்தப்பிரச்சினைக்கு தீர்வொன்றை காண வேண்டுமாயின் முதலில் 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தை முழுமையாக அமுல் படுத்தி அதன் பின்னர் அதிலிருந்து மேலும் அதிகாரங்களை வழங்கக் கூடிய தீர்வொன்றை நோக்கி செல்ல முடியும் என்கிறார் அவர்.

நாட்டைப்பிரிக்காது எவ்வாறு அதிகாரத்தை பகிர்ந்தளிக்க முடியும் என்பது தொடர்பில் மக்களுக்கு அறிவூட்டியபின்னரே அதிகாரப்பரவலாக்கலை நோக்கி முன்னேற முடியும் என்ற நிலைப்பாட்டையே இந்த செவ்வியில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை முன்வைக்கும் போது பதங்களில் எந்தவிதமான குறைகளையும் கண்டுபிடிக்காமல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்பதிலேயே கவனம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிடும் அவர் சமஷ்டி என்னும் எண்ணக்கருவினை தமிழ் அரசியல் தலைமைகளே முதலில் முன்மொழிந்ததன் காரணமாக அன்றிலிருந்து சமஷ்டியை பிரிவினைவாதத்திற்கு சமனான ஒன்றாகவே சிங்களவர்கள் கருதுவதாகவும் செவ்வியில் அமைச்சர் கூறியுள்ளார்.

சமஷ்டி எண்ணக்கருவை முன்வைத்தவர்கள் பின்னர் தனி நாடு அல்லது தமிழீழ கோரிக்கையை முன்வைத்தனர். இதன் காரணமாக சமஷ்டி எண்ணக்கரு ஏற்றுக்கொள்ளப்பட்டால் சில வேளை தமிழ் அரசியல் கட்சிகள் தனி நாட்டுக்கோரிக்கை முன்வைக்கக்கூடும் எனும் அச்சம் சிங்களவர்கள் மத்தியில் எழுந்துள்ளது. என்கிறா அமைச்சர் ராஜித சேனாரட்ன.

13ஆவது திருத்தச்சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்துவதானது அரசியல் அமைப்பில் உள்ளடங்கியுள்ள ஒரு விடயமே என்பதை வலியுறுத்தும் அவர்,அதனை எதிர்ப்பவர்கள அரசியல் அமைப்பு குறித்த சரியான அறிவற்றவர்கள் எனவும் குற்றஞ்சாட்டுகிறார்.

இதேபோன்ற கருத்துக்களையே அரசாங்கத்தின் மற்றொரு அமைச்சரும், 13ஆவதுதிருத்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவான குழுவின் உறுப்பினருமான டிலான் பெரேராவும் முன்வைத்துள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒரு சில அமைச்சர்கள் இவ்வாறான நிலைப்பாட்டை வெளியிட்டுவந்தாலும்,அரசாங்கத்திலும் ஜனாதிபதி மஹிந்தவிடமும் மிகுந்த செல்வாக்கு மிகுந்தவர் என்று வர்ணிக்கப்படும் ஜாதிக ஹெல உறுமய கட்சியைச்சேர்ந்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க 13ஆவது திருத்தச்சட்டமூலத்தை முன்வைத்து அதன்மூலம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்படுமாயின் அரசாங்கத்திலிருந்து விலகிக்கொள்ளப் போவதாக கூறியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை முன்வைப்பதற்கு சிறந்த ஒரு சாதனமாக சர்வகட்சிப்பிரதிநிதிகள் குழு காணப்படுகின்ற போதும் அதில் அங்கம் வகிக்கும் சிலர் அதன் அனைத்து முயற்சிகளையும் உடைப்பதற்கு முயற்சிப்பதாக சாடுகின்றார் அவர்.

13 ஆவது திருத்தச்சட்டமூலத்தை ஒரு அங்கமாகக்கொள்வதற்கே நாங்கள் இணங்கியுள்ளோம். 1987ஆம் ஆண்டு இந்தியாவின் அழுத்தம் காரணமாக பலவந்தமாக செய்து கொள்ளப்பட்ட இந்தப் 13ஆவது திருத்தச்சட்ட மூலத்தை பெரும்பான்மையானவர்கள் எதிர்க்கின்றனர். இந்தச்சட்டமூலத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளை பராமரிப்பதற்கு நாட்டு மக்கள் வருடாந்தம் 80பில்லியன் ரூபாய்களை செலவு செய்ய வேண்டியுள்ளது. 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அரசாங்கம் முழுமையாக அமுல் படுத்தாது என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம் என்று தனது நிலைப்பாட்டை வலியுறுத்துகின்றார் அமைச்சர் ரணவக்க.

13ஆவது திருத்தச்சட்டமூலத்திற்கு ஆதரவு அளிக்கும் அமைச்சரான ராஜித சேனாரட்ண ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனைக்கு வாக்களிக்காதவர் எனக் கூறிப்பிடும் அமைச்சர் ரணவக்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிங்களவர்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் என்பதால், அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முக்கிய இடம்பிடித்திருந்த வடக்கு,கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு தொடர்பான கொள்கையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என அடித்துக் கூறியுள்ளார். இனப் பிரச்சினைக்கான தீர்வு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுவிட்ட ஒன்று என அமைச்சர் ரணவக்க உறுதிபடக்கூறியுள்ளார்.

இவரைப்போன்றே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகரவும் 13ஆவது திருத்தச்சட்டமூலத்திற்கு ஆதரவான நடவடிக்கைகளையும் ஆதரவாக செயற்படுபவர்களையும் கடுமையாக சாடுகிறார். 13ஆவது திருத்தச்சட்டமூலத்திற்கு ஆதரவான அமைப்பு தொடர்பாக தொடர்ந்தும் விமர்சனங்களை வெளியிட்டு வரும் அவர், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு அமைச்சர்களான ராஜித சேனரத்தன மற்றும் டிலான் பெரேரா கோருவதானது தமிழீழக்கனவை நனவாக்கும் ஒரு முயற்சி என குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்வாறானவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கினால் போர்ரை நிறுத்தி சமாதானப்பேச்சுவார்த்தைக்கும் அழைப்பு விடுப்பார்கள். இந்த அமைச்சர்கள் இருவரும் போரில் வெற்றி பெறுவது சாத்தியம் அற்றது எனக்கூறிவந்ததன் மூலம், தமிழீழத்திற்கு மறைமுகமான ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றனர். தற்போது நிலைமை மாறிவிட்டதால் 13ஆவது திருத்தச் சட்டமூலம் குறித்து அவர்கள் பேசி வருகின்றனர் எனத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர சாடுகின்றார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன பாராளுமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்தியே 13ஆவது திருத்தச்சட்டமூலத்தை அமுல்படுத்துவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொண்டார் எனவும் 13ஆவது திருத்தச்சட்டமானது சமஷ்டி அரசாங்கத்தை உருவாக்க கூடும் என எச்.என்.டி.சில்வா போன்ற சட்டவல்லுநர்கள் அப்போதே கூறியிருந்ததாகவும் குணசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

13ஆவது திருத்தச்சட்டமூலம் அமுல் படுத்தப்பட்டால் மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படும் எனவும் அவ்வாறு அதிகாரங்களை வழங்கத் தொடங்கினால் ஈழக்கனவுக்காக ஆர்வத்தை அது கிளறிவிடுவதாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மேற்கு வன்னியில்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் கடந்த 2ஆம்திகதி வன்னேரியில் இடம்பெற்ற தாக்குதலில் தான் முதன் முறையாக தமது வலிந்த தாக்குதலுக்கு பயன்படுத்தியிருந்தது.

இதன் உடன் இன்னொரு உயர் வலு கொண்ட டாங்கி எதிர்ப்பு ஏவுகணையான சீனத் தயாரிப்பு ''ஹொங் ஜியான்'' எனப்படும் சுடுகலன் மற்றும் கனரக ஆயுதங்களுடன் படையினர் முன்னேறினர்.

நாச்சிக்குடாவில் தமது தாக்குதல் முறியடிக்கப்பட்டதால் புலிகளின் விசேட அணிகள் அங்குதான் நிலைகொண்டிருப்பதாக கருதிய படையினர் வன்னேரி -அக்கராயனில் உள்ள புலிகளின் முன் அரணை இலகுவில் உடைத்துவிடலாம் என்று எண்ணியது. ஆனால் நேரம் செல்லச்செல்ல விடயம் விளங்கிவிட்டது. நாச்சிக்குடாவிலும் பார்க்க பாரிய இழப்புகள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகளே அதிகம் தெரிய ஆரம்பித்தது. புலிகளின் எதிர்த்தாக்குதலில் முன்சென்ற படைகள் மண்கவ்வத்தொடங்கின. அடுத்தடுத்து அனுப்பிய அணிகளால் புலிகளின் இலக்குத்தவறாத எறிகணைத்தாக்குதலில் எதிர்த்து நின்று சமராட முடியவில்லை.திடீர் திடீர் என.ஒவ்வொரு பகுதிகளினால் எதிர்த்தாக்குதல்களை ஆரம்பித்து வலிந்த தாக்குதல் மேற்கொண்ட படையினரையே வலையில் விழுத்த ஆரம்பித்த புலிகளின் தொடர் தாக்குதல்களால் படைத்தலைமை நடவடிக்கையை நிறுத்த தீர்மானித்தது.

புலிகளின் பகுதிகளுக்குள் சென்று பலியான படையினரின் சடலங்கள் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. ஆனால் நாச்சிக்குடாவில் படையினரின் சடலங்களைக் கைப்பற்றப்போய் மேலதிக படையினரை இழந்ததால் இந்த தாக்குதலில் சடலங்கள் புலிகளிடம் போனாலும் பரவாயில்லை இழப்புக்களை குறைத்துக் கொண்டு மீண்டும் தளம் திரும்பலாம் என்ற முடிவுடன் மாலை ஆறு மணியளவில் படை நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் பலியான சுமார் 30 படையினரில் 22பேரின் சடலங்களை புலிகள் மீட்டனர். அத்துடன் பெருந்தொகையான ஆயுதங்கள் கைப் பற்றப்பட்டன முன்சென்ற படையினர் எப்படியாவது புலிகளின் தாக்குதலுக்கு தாக்குப்பிடித்து அவர்களது அரணை உடைப்பது என்ற முடிவுடன் போனதால் அவர்கள் கனரக ஆயுதங்களுடன் முன்னேறியிருந்தனர்.

தாக்குதலில் இவர்கள் கொல்லப்பட கொண்டு சென்ற பெருந்தொகையான ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

பெரும் இழப்புக்களுடன் படையினரின் இரண்டு திட்டங்களும் கைவிடப்பட்டுள்ள போதும் இதனை படையினரின் நிரந்தர ஓய்வு நிலையாக கருதி விட முடியாது.

ஏ-9 பாதையை தொடாமல் வன்னியில் தொடர்ந்து ஒரு படை நடவடிக்கையை செய்து அதில் வெற்றிகாண வேண்டுமானால் அதற்கு படையினரிடம் உள்ள ஒரே இலக்கு பூநகரி மட்டும் தான். அதனைக் கைப்பற்றி குடாநாட்டுக்கான புலிகளின் அச்சுறுத்தலை முற்றாக இல்லாமல் செய்து விடுவதே படையினரின் தற்போதைய பாரிய திட்டமாக உள்ளது. அந்த முயற்சியிலிருந்து இராணுவம் இலகுவில் பின் வாங்கி விடப் போவதில்லை.

ஆனையிறவை நோக்கிய இலக்குடன் எத்தனை நடவடிக்கையைமேற்கொண்டு முகமாலையில் பெரும் இழப்புக்களை சந்தித்தாலும் அந்த முயற்சியை மேற்கொள்வதில் படையினர் இன்னமும் எவ்வளவு உறுதியாக உள்ளனரோ அதுபோன்ற ஓர் மனநிலை தற்போது வன்னியின் மேற்கில் தோன்றியுள்ளது. இதற்கு புலிகளின் தளம்பாத கள உத்திகள் தக்க பாடம் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

வலிந்த தாக்குதல் என்பது எதேச்சையாக எங்கும் ஆரம்பிக்க கூடிய ஒன்று. அதற்கு படைபலமும் ஆயுதபலமும் இருந்தால் போதும். ஆனால் தற்காப்பு தாக்குதலின் வெற்றி எனப்படுவது சமச்சீரற்ற படை நகர்த்தல்,கள உத்திகள் மற்றும் நேர்த்தியான தாக்குதல் எதிர்வு கூறல்கள் ஆகியவற்றின் அடிப்படையிலானது.

இந்த வகையில் புலிகளின் படைக்குவிப்பும் அவர்களது எதிர்ப்புவலுவும் எங்கு குவியப்படுத்தப்பட்டிருக்கிறது என்ற விடயத்தில் படையினர் தற்போது திக்குமுக்காடிப் போயுள்ளனர் என்பதே உண்மை.

பாலமோட்டையில்ஒரு வலிந்த தாக்குதல் மேற்கொண்டால் அங்கு புலிகளின் கடும் எதிர்ப்பு காணப்படுகிறது. நாச்சிக் குடாவில் ஒரு வலிந்த தாக்குதல் ஆரம்பித்தால் அங்கும் புலிகளின் கடும் எதிர்ப்பு காணப்படுகிறது. வன்னேரியில் ஒரு வலிந்த தாக்குதலை ஆரம்பித்தால் அங்கும் புலிகளின் கடும் எதிர்ப்பு காணப்படுகிறது. முகமாலையில் ஒரு வலிந்த தாக்குதலை ஆரம்பித்தால் அங்கும் அதே நிலை.

படைத்தளபதியின் கூற்றுப்படி ஆயிரக் கணக்கில் புலிகள் கொன்றொழிக்கப்பட்டால் இந்த பரந்துபட்ட எதிர்த்தாக்குதல்களுக்கான புலிகள் எங்கிருந்து புதிதாக வருகிறார்கள் என்பது அடுத்த ஊடகவியலாளர் மாநாட்டில் கெஹலிய ரம்புக்வலவிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி.


இது இவ்வாறுஇருக்க வன்னேரி-அக்கராயனில் படையினர் பயன்படுத்திய புதிய டாங்கி எதிர்ப்பு ஏவுகணை பற்றி களத்திலிருந்து பேசவல்ல ஒருவரிடம் கேட்ட போது,

'புலிகளிடம் உள்ள டாங்கி எதிர்ப்பு ஏவுகணையில் புதிதாக ஒன்று சேர்ந்திருக்கிறது அவ்வளவுதான்' என்றார். 'அப்படியானால் கடந்த இரண்டாம் திகதி சமரில் பாகிஸ்தான் தயாரிப்பான பக்தார் ஷிக்ஹான் எனப்படும் டாங்கி எதிர்ப்பு ஏவுகணையும் கைப்பற்றப்பட்டுள்ளதா' என்று கேட்க அதற்கிடையில் அழைப்பு அறுந்து விட்டது. *

# வண்ணமயமாக ஆரம்பமானது பராலிம்பிக்














உடல் ஊனமுற்றவர்களுக்கான பராலிம்பிக் நேற்று சீனத் தலைநகர் பீஜிங்கில் வண்ணமயமான ஆரம்பவிழாவுடன் தொடங்கியது. உடல் ஊனமுற்றிருந்தாலும் பார்ப்பவரை பிரமிக்க வைத்த வகையில் கலைஞர்கள் சாகசத்துடன் ஆரம்பவிழா சிறப்புற நடைபெற்றது. போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. நேற்று பீஜிங் தேசிய அரங்கில் நடைபெற்ற ஆரம்பவிழா நிகழ்வின் படங்களை மேலே காணலாம்.

## இலங்கை அணி வீரர்கள் ஐ.பி.எல்லில் விளையாடத் தீர்வு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு ஆரம்பமாக இருக்கும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) இருபது -20 தொடர் மற்றும் இலங்கை அணியின் இங்கிலாந்து தொடர் இரண்டும் ஒரே சமயத்தில் நடக்க இருப்பதால் இந்த சிக்கலில் தீர்வு காண இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் காமினி, முன்னாள் கிரிக்கெட் வீரர் துலிப் மெண்டிஸை நியமித்துள்ளார்.

ஐ.பி.எல் அணியில் இடம்பெறும் இலங்கை வீரர்கள் தேசிய அணி சார்பாக இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்று இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் அர்ஜுன ரணதுங்க கூறினார்.

ஆனால் வீரர்கள் சிலர் தயக்கம் தெரிவித்து வருகின்றனர். இலங்கை வீரர்கள் இங்கிலாந்து சுற்றுப்பயணம் உறுதி செய்யப்படுவதற்கு முன்னர் கிரிக்கெட் சபை ஒப்புதலின் பேரில் ஐ.பி.எல் நிர்வாகத்தோடு 3 ஆண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

ஆபிரிக்க நாடுகளின் அரசியல் சூழ்நிலை காரணமாக சிம்பாவே அணியோடு கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட இங்கிலாந்து தயங்கியது.

இதனால் இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் வேண்டுகோளை ஏற்ற இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் அங்கு இரண்டு டெஸ் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் பங்கேற்க சம்மதம் தெரிவித்தது.

இந்நிலையில் அதே காலப்பகுதியில் ஐ.பி.எல் இருபது -20 தொடர் நடைபெறவுள்ளதால் அதில் பங்கேற்க இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன, சங்கக்கார உள்ளிட்ட வீரர்கள் முடியாமல் உள்ளது. எனினும் தற்போது இதற்கு தீர்வு காணும் பொருட்டு முன்னாள் அணி வீரர் துலிப் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து துலிப் மெண்டிஸ் கூறுகையில், இலங்கை கிரிக்கெட் வீரர்களின் சிக்கலுக்கு தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ளேன். இது தொடர்பாக வீரர்களுடன் கலந்து பேச இருக்கின்றேன்.

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரினிடையே இலங்கை வீரர்கள் இங்கிலாந்து சுற்றுப் பயணதில் பங்கேற்றுவிட்டு, பின்னர் இருபது -20 போட்டிகளில் தொடர்ந்து விளையாட ஆலோசனை வழங்கப்படும் என்று கூறினார். (5)

## இனிவரும் போட்டிகளில் மெண்டிஸின் பந்து வீச்சு சவாலாக இருக்காது

### ரோகித் சர்மா சொல்கிறார்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீரர்களில் ஒருவராக திகழ்பவர் அஜந்த மெண்டிஸ். இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இவரது பந்து வீச்சு மிகவும் அபாரமாக இருந்தது.

இந்தியத் துடுப்பாட்ட வரிசையை அவர் நிலைகுலைய வைத்தார். இதனால் டெஸ்ட் தொடரை இலங்கை அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இத் தொடரில் மெண்டிஸ் 26 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். ஆனால் ஒருநாள் தொடரில் அவரது பந்துவீச்சை இந்திய வீரர்கள் நம்பிக்கையோடு ஆடினார்கள்.

இதனால் ஒருநாள் தொடரை இந்தியா 3-2 என்ற கணக்கில் கைப்பற்றியது.

மெண்டிஸ் பந்து வீச்சு இனிவரும் போட்டிகளில் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு கடினமாக இருக்காது என்று இந்திய அணியின் ரோகித் சர்மா கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, ஒருநாள் தொடரில் மெண்டிஸ் பந்துவீச்சை இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் சமாளித்து ஆடினார்கள்.

டெஸ்ட் தொடரில் சிறப்பாக வீசிய அவரால் ஒருநாள் தொடரில் முத்திரை பதிக்க முடியாமல் போனது.

இனிவரும் போட்டிகளில் மெண்டிஸ் பந்து வீச்சு சவாலாக இருக்காது. எங்களுக்கு எந்த விதமான கடினமும் இருக்காது.

ஒருநாள் தொடரில் நான் சரியாக ஆடவில்லை. ஆனால் அணி சிறப்பாக விளையாடி தொடரை வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரை ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கிறேன். இவ்வாறு ரோகித் சர்மா கூறினார். (5)

## முத்தரப்பு தொடரில் ஆட தென்னாபிரிக்க அணி மறுப்பு

(கேப்டவுன்)

சம்பியன்ஸ் கிரிக்கெட் தொடர் தள்ளி வைக்கப்பட்டதால் தென்னாபிரிக்காவில் முத்தரப்பு போட்டியை நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முயற்சி மேற்கொண்டது.

இந்நிலையில் இது குறித்து தென்னாபிரிக்கா அணியின் தலைவர் சிமித் கூறியதாவது,

தென்னாபிரிக்கா அணிக்கு தற்போது ஓய்வு தேவைப்படுகிறது. எனவே நாங்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கேட்டுக் கொண்ட முத்தரப்பு போட்டியில் விளையாட விரும்பவில்லை.


பாகிஸ்தான் மட்டுமல்ல இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள், கனடா, நியூசிலாந்து ஆகிய அணிகளும் எங்களுடன் தொடர் நடத்த விரும்பின.

ஒரு தொடரில் சிறப்பாக செயல்பட வேண்டும் என்றால் எல்லா வீரர்களும் நல்ல உடல் தகுதியுடனும் நல்ல போர்மிலும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடருக்கு (பெர்த்தில், டிசம்பர் 17ஆம் திகதி முதல் டெஸ்ட் ஆரம்பமாகிறது) நன்றாக தயாராக வேண்டியது முக்கியமானதாகும்.

அப்படியிருக்கையில் தற்போது வேறு போட்டிகளில் ஆடுவது சரியாக இருக்காது. இவ்வாறு சிமித் கூறினார். (5)

## கோல்டன் லீக் தடகளத்திலும் உசைன் போல்ட் முதலிடம்




(புருசல்ஸ்)

கோல்டன் லீக் தடகளப் போட்டியில் 100 மீற்றர் பிரிவில் ஒலிம்பிக் சம்பியன் உசைன் போல்ட் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளில் ஜமேக்கா வீரர் உசைன் போல்ட் புதிய உலக சாதனையோடு 100 மீற்றர் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றார்.

அத்துடன் 200 மீற்றர் மற்றும் 4X400 மீற்றர் ரிலே போட்டியிலும் அவர் தங்கப்பதக்கம் வென்றார்.

இந்நிலையில் புருசல்ஸில் நடைபெறும் கோல்டன் லீக் தளகளப் போட்டியில் அவர் 100 மீற்றர் போட்டியில்கலந்து கொண்டார். இதில் 9.77 வினாடியில் அவர் முதலிடத்தைப் பிடித்தார்.

குளிர் காற்று வீசியதால் பாதகமான நிலையில் இந்தப் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் அசபா பவல் ஆரம்பத்தில் போல்ட்டை முந்திச் சென்றார்.

கடைசி நேரத்தில் போல்ட் மின்னல் வேகத்தில் பாய்ந்து சென்று முதலிடத்தைப் பிடித்தார். பவல் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். ஜமேக்கா வீரர் நெஸ்டா கார்டர் 3-வது இடத்தைப் பிடித்தார். (5)

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



UNION ASSURANCE PLC

மாபெரும் உடனடி வேலை வாய்ப்பு

இலங்கையின் காப்புறுதி வரலாற்றில் 22 வது வருடத்தில் பல அரிய விருதுகளைப் பெற்றுத் தொழிற்படும் யூனியன் அஸ்யூரன்ஸ் பீ.எல்.சி. நிறுவனத்தில் தொழில் புரிய அரியதோர் வாய்ப்பு!

பதவி :-

01. Insurance Advisor
02. Insurance Development Officer
03. Assistant Agency Development Manager
04. Agency Development Manager

கல்வித் தகைமைகள் :-

01. G.C.E. O/L கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி. (ஆகக் குறைந்தது)
02. காப்புறுதித் துறையில் முன்னனுபவம் விரும்பத்தக்கது. (ஆனால் முக்கியமல்ல)
03. உயர் பதவிகளுக்கு மேலதிக தகைமைகள் எதிர்பார்க்கப்படும். (ஆயுள் காப்புறுதி – பதவி இலக்கம் 3,4)

வேலை வாய்ப்பின் மூலம் பெறக் கூடிய நன்மைகள் :-

01. அதியுயர் சம்பளம் பெறக் கூடிய அரிய வாய்ப்பு
02. 6 மாத காலத்தில் அதீத திறமையுடன் வேலை செய்பவர்கள் நிரந்தர வருமானத் திட்டத்திற்குள் உள் வாங்கப்படுவார்கள்.
03. இலவச வெளிநாட்டு சுற்றுலாவிற்கான அரிய வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளல்.
04. இலகு தவணை முறையில் வாகனக் கடன் வசதிகள்
05. வருடா வருடம் தங்கம் போன்ற விருதுகளைப் பெறும் வாய்ப்பு.
06. உங்கள் திறமைக்கு ஏற்றவகையில் விரைவான பதவியுயர்வுகள்.

நேர்முகத் தேர்வு

நேரம் :- 9.30 a.m.
காலம் :- 08.09.2008
இடம் :- யூனியன் அஸ்யூரன்ஸ் பிரதான மண்டபம் 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A.Anton**
Unit Development Manager
Union Assurance PLC
Jaffna.

(1655)

# தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவ. சென்.அன்ரனிஸ் சம்பியன்

(நீர்கொழும்பு)

தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி முதலிடம் பெற்றுச் சம்பியனானது.

பெண்கள் பிரிவில் மானிப்பாய் மகளிர் அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நேற்று ஆரம்பமானது. நீர்கொழும்பில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி சம்பியனானது.

நீண்ட இடைவெளிக்குப் பின் உடற்பயிற்சி ஆண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட அணி சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு உடற்பயிற்சிப் போட்டியில் வவுனியா இறம்பைக்குளம் மகா வித்தியாலயம் 2 ஆம் இடத்தைப் பெற்றதுடன் 3ஆம் இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரி பெற்றுக் கொண்டது.

இதேவேளை கடந்த ஆண்டு நடைபெற்ற தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் நேற்று மொரட்டுவையில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட 15 வயதுப் பிரிவில் முதல் சுற்று காலிறுதி ஆட்டங்களில் வெற்றி பெற்று சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

அண்மையில் நடைபெற்ற வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான வலைபந்தாட்ட 15 வயதுப் பிரிவில் சம்பியனான சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி தேசிய மட்டப் போட்டியில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அரையிறுதி, இறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளது. ச–5)

## இந்திய – அமெரிக்க அணுசக்தி...

விவாதங்களுக்குப் பின்னர் எட்டப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்திற்கு அமெரிக்கக் காங்கிரஸ் மன்றம் ஒப்புதல் வழங்கிய பின்னர் இது அமுலுக்கு வரும்.

இதேவேளை இந்தியாவுக்கு சர்வதேச அணுசக்தி தொழில்நுட்பம் கிடைக்க வகை செய்யும் இந்தியா – அமெரிக்கா இடையிலான இராணுவம் சாரா அணுசக்தி உடன்பாட் டுக்கு சர்வதேச அணுசக்தி வழங்கும் நாடுகள் குழுவில் கிடைத்துள்ள அங்கீகாரம் முன்னேற்றகரமான முடிபு என்று இந்தியா வரவேற்றுள்ளது.

இந்தியாவுக்கு அணுசக்தித் தொழில்நுட்பத்தை வழங்குவதற்குத் தனது விதிமுறைகளைத் தளர்த்தி அணுசக்தி வழங்கும் நாடுகள் வழங்கியுள்ள சலுகை, கடந்த 34 ஆண்டுகளாக அணுசக்தித் தொழில்நுட்பத்தில் இந்தி யா தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலை முடிபுக்கு வந்திருப்பதாக பிரதமர் மன்மோகன் சிங் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்துக்கு மிடையில் இராணுவம் சாரா அணுசக்தி ஒத்துழைப்பை ஏற்படுத்துவது இந்தியாவுக்கும் உலகுக்கும் நன்மை பயக்கும் என மன் மோகன் சிங் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமெரிக்க அதிபர் ஜோஜ் புஷ்ஷுடன் தொலைபேசியில் உரையாடிய மன்மோகன் சிங், அவர் எடுத்த முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்தார். (ச–5)

## வன்னிக் கள...

இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாக இராணுவத் தலைமையகம் தனது இணையத் தள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கின்றது.

இதற்கிடையே முல்லைத்தீவு மாவட்டம் தண்ணி முறிப்புக்குளம் பிரதேசத்திலுள்ள விடுதலைப்புலிகளின் முன்னரங்கப் பதுங்குகுழி வரிசை ஒன்றின் மீது சனிக்கிழமை காலை எம்.ஐ.–24 ரக தாக்குதல் உலங்கு வானூர்த்திகள் தாக்குதல் நடத்தி விடுதலைப் புலிகளுக்குச் சேதங்களை ஏற்படுத்தியிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சகம் கூறியிருக்கின் றது.

இந்தப் பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்கு உதவியாக அடையாளம் காணப்பட்ட விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக விமானப் படையின் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்திருக்கின்றார். (ச–3,5)

## பாக்.ஜனாதி...

நடைபெற்றது. பாகிஸ்தான் அரசியலமைப்புக்கு ஏற்ப ஜனாதிபதி பதவி விலகி 30 நாள்களுக்குள் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வேண்டும்.

நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்த லில் படுகொலை செய்யப்பட்ட பெனாசிர் பூட்டோவின் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சி சார்பில் அவரது கணவரான ஆசிப் அலி சர்தாரி, நவாஸ் செரீப் தலைமையிலான முஸ்லிம் லீக் கட்சி சார்பாக சயீத் உஸ்மான் சித்திக். முஷாரப் ஆதரவுக் கட்சி சார்பில் முஷாகித் உசேன் சயீத் ஆகியோர் போட்டியிட்டனர். (ச–5)

## நிவாரணப்...

திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் மொகமட் சலிஹீன் கூறினார்.

நிவாரணப் பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் பாதுகாப்புத் தரப்பினரின் பாதுகாப்புடன் தடையின்றிச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

இடம்பெயர்ந்தவர்களில் குறிப்பாக சிறுவர்களும் பெண்களும் போசாக்கின்மையால் பாதிக்கப்படாமல் இருப்பதற்குத் தொடர்ச்சியான உணவுப் பொருள் விநியோகம் இடம்பெற வேண்டும் என உலக உணவுத் திட்டம் கூறுகின்றது. (ச–5)

## வன்னேரிக்குளம்...

நாச்சிக்குடா முறியடிப்பில் படையினரின் 7 உடலங்களையும் கைப்பற்றியிருந்தனர். குறித்த ஊடகம் அக்கராயன் வன்னேரிக்குளம் மோதலில் 50 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 120 பேர் காயமடைந்தனர் என்று தகவல் வெளியிட்டுள்ளது.

4–வது சிங்க படைப் பிரிவின் லெப்.கேணல் ரவிப்பிரிய என்ற அதிகாரியூால் படை நடவடிக்கை வழிநடத்தப்பட்டது என்றும் அப் படைப் பிரிவு 57–1 ஆம் பிரிகேட்டின் கீழ் இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கையையடுத்துக் களத்திலிருந்து 4–வது சிங்கப் படைப் பட்டாலியன் அகற்றப்பட்டுள்ளது என்றும் 57–1 ஆம் பிரிகேட் தளபதி தாக்குதல் முறியடிப்பையடுத்து அடுத்த கட்டம் தொடர்பில் நகர்வில்லாமல் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச–5)

## வட மாகாண சபை...

வவுனியா வைத்தியசாலையில் 132.5 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுக்கான புதிய கட்டடத் தொகுதியை வட மாகாண ஆளுநர் விக்டர் பெரேரா வவுனியாவுக்கு முதல் தடவையாகச் சென்று அந்தக் கட்டடத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

மீள் குடியேற்ற அமைச்சர் றிசாட் பதியுதீனுடன் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சமூக நலத்துறை அமைச்சரும் வடக்கு செயலணிக்குழுவின் தலைவருமாகிய டக்ளஸ் தேவானந்தா வட மாகாண சபைக்கான அலுவலகத்தை மாங்குளத்தில் அமைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

இந்த முக்கியஸ்தர்களின் வருகையை ஒட்டி வவுனியா நகரப் பகுதியில் படையினரும் பொலிஸாரும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள். மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாக இங்கு உரையாற்றிய வட மாகாண ஆளுநர் விக்டர் பெரேரா தெரிவித்தார். (ச–3,5)

Jaffna College

இதோ
யாழ் மாணவர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்

ஆற்றலுக்கேற்ப குழுக்கள் தெரிவுசெய்யப்படும்

வகுப்புக்கள் வார மற்றும் வார இறுதி நாட்களில் இடம்பெறும்

Certificate Course in English

**Areas Focused**

UNIT 1 :- Basic English Grammar Skills for Communication( 30Hours)
UNIT-2:- Speaking Skills ( 20Hours)
UNIT 3:- General and academic reading skills (20 Hours)
UNIT 4:- Writing skills (30 Hours)
UNIT 5:- Listening Skills (15Hours)
UNIT 6:- Introduction to English literature (15 Hours)

**Certificate :-** Certificate will be awarded by Jaffna College on passing the final examination in all the units

**Target Group**
School leavers
Govt, non Govt employees

University Student & other students of tertiary education

**Duration:-6 months** **Register before :- 10-09-2008**

Director
Jaffna College Undergraduate Dept
464 , Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.